www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அ ஆ இ

a aa ie

# A AA IE

## காலாண்டு இதழ்

சுவடு 15
புரட்டாதி 1993

வெளியீடு
இலங்கைக் கலாச்சாரக் குழு
நெதர்லாந்து

A AA IE
Post bus 85326
3508 AH Utrecht
Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனராத்திரிகள்



## இளைய அப்துல்லாஹ்

இறந்து இறந்து பழகிப்போன
எங்கள் இரவுகளில் இன்னும் நாம்
விலக முடியாமல் வாழ்ந்து கொண்டே (?)

பயந்த இரவுகளாய் இன்னும்
எத்தனை யுகங்கள் கழிவதாய்
எண்ணுகிறார்கள்.

நிம்மதிக்காய் உலகினில் பிறந்தோம்
என்பது பழமொழி.
நிம்மதி அறுப்பதற்காய் குழந்தைகளே
இனி - இனி ஜனனியுங்கள்.

மௌனமான இருண்ட இரவுகள்
எங்கள் முன் கொலைகாரனாய்...
செத்துப்போகும் நினைவுகள்
சொல்லாமல் எந்தக்காலையும் எந்த மாலையும்
புலர்வதுமில்லை - மறைவதுமில்லை.

இப்பொழுதெல்லாம்
எங்கள் இரவுகள் மௌனமாய்த்தான்
இருளுகின்றன.
சின்னவர் - பெரியவர் - கிழவிகள் - விதவைகள்
எல்லோரும்
விழிபிதுங்க... மௌனமாய்

**அட்டைப்படமும்**
**ஏனைய படங்களும்**
**கே.கே.ராஜா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

இலங்கையின் நிலமைகள் தேசிய இனங்களுக்கான நம்பிக்கையீனங்களையே வளர்த்துக் கொண்டுவருகிறது. புதிய மாற்றங்களுக்கான அல்லது ஒரு பேச்சுவார்த்தைக்கான அல்லது ஒரு அமைதியான சூழலுக்கான எந்தச் சிறு ஓட்டைகளும் தெரியவில்லை. பல தெரிவுக்குழுக்களும்சரி, முன்மொழிவுகளும்சரி எல்லாமே பம்மாத்து என்பதே முடிவாகப் போய்விட்டது.

வடபகுதிக்கான உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எல்லாமே குதிரைவிலை யானைவிலைதான்.

கிளாலிக்கடலில் அரசபடைகளும், விடுதலைப் புலிகளும் கடும்மோதலை நடத்தி சேதங்கள் அடைந்துள்ளனர்.

கொழும்பில் தமிழர்களைக் கைதுசெய்வதும் அவர்களை சித்திரவதை செய்வது பயமுறுத்துவது, எந்தக்காரணங்களுமற்று தடுத்து வைப்பதும் தொடர்ந்தவண்ணமே இருக்கிறது. அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணமே அவர்களது கைதுக்கான காரணங்கள். அண்மையில் 'அருவி' சஞ்சிகை ஆசிரியர் து.பாஸ்கரன் இவ்வகையில் கைதாகி 'விலாவாரியாகப்' பெற்ற அனுபவங்களை எமக்குட்பட பல பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்திருந்தார். அரசு கண்மூடித்தனமாக தமிழர்கள் மீது காட்டுகின்ற விரோதம் தொடர்ந்து பயங்கரமாகிக் கொண்டே போகிறது.

கிழக்குமாகாணம் எங்கும் ஒரு பதட்டமான நிலமையே உள்ளது. எந்தநேரத்தில் எதுவும் நடக்கலாம் அரசபடைகள், விடுதலைப்புலிகள்,

www.tamilarangam.net

ஏனைய தமிழ் முஸ்லிம் குழுக்கள் என்று அச்சம் தொடர்கிறது. வடக்கில் நிலமைகள் உணவுத்தட்டுப்பாடு, யுத்தம், விடுதலைப்புலிகளின் வரி அறவீடுகள், தாங்கள் கைது செய்து வைத்திருக்கும் பலரை அவர்களது பெற்றோரோ குடும்பத்தினரோ பார்க்க தடையாக இருப்பது. என்று தொடர்கிறது.

இந்தச் சூழலிலிருந்து விலகி புகலிடநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் நாமுண்டு நம்பாடுண்டு என்ற போக்கில் வாழத்தலைப்படுகிறதும். இயக்கத்திற்குப் பணம் கொடுத்துவிட்டு கிடைக்கிற செய்திகளையே தரிசனமாக்கிக் கொண்டு இருந்துவிடுவதும். புகலிடநாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளினால் வேலை இழப்பதும், இனவெறிக் கொடுமைகளுக்குள் திணறுவதுமாய் தொடர்கிறது:

ஆயினும் புகலிட நாடுகளிலே உள்ள தமிழர்களிடையே தோன்றியுள்ள பல புதிய எழுர்ச்சிகளையும் அவர்களது பலவாறான அக்கறைகளையும் நாம் இன்று காணமுடிகிறது. ஒரு புதிய அரசியல் தேவையின் அவசியத்தையும் மூறாவது பாதைபற்றிய அக்கறையையும் காட்டி நிற்கிற பல பத்திரிகைகளும், குழுக்களும் அவர்களது தேடல்களும் சந்திப்புக்களும் உண்மையில் வரவேற்கப்படவேண்டியவைகளே. எமது தேசத்தின் விடுதலையில் அக்கறையும் விடுதலைக்குரிய நேர்மையானதும் ஆரோக்கியமானதுமான உணர்வுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதும் எமது கடமைகள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய இனவிடுதலையும் இனங்களுக்கான பாரபட்சமற்ற வாழ்வையும் கோருகின்ற ஒரு பரந்த அணியை முன்னெடுக்க வேண்டிய அவசியம் இன்றும் எம் முன்னுள்ளது. அவ்வகை உணர்வு வெறுமனே ஒரு கட்சி, ஒரு இயக்கம் அல்லது மரபுரீதியான கோட்பாடுகள் என்று குறுகிவிடாமல் பரந்த பார்வை கொண்டதாய் பல்வேறு தரப்பினரும் இணையக்கூடியதான அணியாக வளர்த்தெடுக்க வேண்டியதும் எமது கடமைகள் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு கவிஞனோடு
## அரற்றுதல்

இரா. ரஜீன்குமார்

சூரியனோடு பேசிய கவிஞனே!
என்னை எழுதத் தூண்டிய கவிஞருள்
நீயும் ஒருவன்
அந்தியில்
சூரியனோடு பேசும் வானம்
எங்கும் சிவப்பென
ஜெகமே இடித்துரைக்க
அண்டார்டிக்காவில் அது பச்சை நிறமென
ஓங்கி ஒலிக்கும் திடத்தைப் பெற நான்
உனது கவிதையில் படர்வதுமுண்டு

எல்லோருடைய எழுதுகோல்களும்
நெற்றிக் கண்களைப் பொருத்திக் கொண்டன
வீரியமாய் முப்புரத்தை எரித்து
மன்மதன், நக்கீரன், ...என
நமத்துப்போயின நெற்றிக் கண்கள்
நம்பிக்கை ஞாயிற்றின் விதைகளையெல்லாம்
முலைக்கற்களாய் நாட்டத் தொடங்கி
நாடு முழுவதும் நாட்டிய கற்கள்

கைப்பிடி மண்ணும் மலையாய்ப் பெருகி
குண்டைப் புதைக்க குண்டாய் நிறைந்து
பிணத்தைப் புதைக்க பிணமாய் நிறைந்து
எங்கள் கிராமங்கள் மண்வழும் நிறைந்தவை
எதைப் புதைத்தாலும் தோப்பாய் நிறையும்

வெடி குண்டின் மீது வீழ்ந்து படுத்து
தோழரைக் காத்த
வெத்திலைக்கேணி அப்புவின் ஆத்மா
பதறித் துடிக்க


தோழர் வெட்டிய குழிகளில்
தோழரைத் தள்ளி குண்டுகள் போட்ட
காலமும் வந்ததே!
ஹிட்லருக்கும் ஏனையோருக்கும்
நடுவில் கோட்டைக் கிழித்தது போல
பொது எதிரிக்கும் நமக்கும் நடுவில்
ஒரேயொரு கோடு
நீ, நான் முசோலினி....
கோட்டுக்கு இப்பால்

ஒன்று நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகி
கோடு இப்போ சாரையாய் நெளிவுறும்
மூஞ்சூறொன்றைக் கவ்வியபடிக்கு

பூனைகள் தொல்லைக்காக
எலிகளைக் காவல் வைத்து
தாய் எலி ஈன்றவற்றை
எலிகளே காவு கொள்ள
பூனைகள் வழிமறிக்கும்
பூனைகள் பின்னே இரு
சிங்கங்கள் உறுமி நிற்கும்

தாய் எலி என்ன செய்யும்?
பொது எதிரியாய் யாரைக்கொள்ளும்?
கவிஞனே சொல்லு ! சொல்லு!
திரேதயுகத்து சங்கை ஊதுமோ?
கிருதயுகத்து அசுரனைத் தேடுமோ?
இந்து சமுத்திரக் குழிகளில் குதிக்குமோ?
அகதியாய் அலைந்து வீழ்ந்து படுமோ?

www.tamilarangam.net




# இலக்கியச் சந்திப்பு மலர் — ஒரு பார்வை

16 இலக்கியச்சந்திப்புகளிலும் பல்வேறு பொருளில் அரிய உரைகளும், கலந்துரையாடல்களும் நடைபெற்ற போதிலும் அவை நூல்வடிவிலோ, கட்டுரை வடிவிலோ வெளிவராததால் அவற்றின் நிலைத்த பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளமுடியாது போய்விட்டது.

மேற்கு பேர்லினில் நடைபெற்ற 6வது இலக்கியச் சந்திப்பின் போது வெளியிடப்பட்ட "6வது இலக்கியச்சந்திப்பு அறிமுகத்தொகுப்பு" என்ற வெளியீடு இவ்வகையில் ஒரு நல்ல முன்னுதாரணமாய் திகழ்ந்தது. ஆயினும் அதனையடுத்து நடந்த இலக்கியச்சந்திப்புக்களில் இம்முயற்சி பின்பற்றப் படாமல் போனது துரதிர்ஷ்டவசமானதுதான்.

நெதர்லாந்தில் கடந்த ஆவணி 7 - 8 திகதிகளில் நடைபெற்ற 16வது இலக்கியச்சந்திப்பின் போது வெளியிடப்பட்ட 16வது இலக்கியச்சந்திப்பு மலர் மிகவும் பாராட்டப்படவேண்டிய முயற்சியாகும். 74



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்கங்களில் 12தலைப்புகளில் அமைந்த பல சிறந்த கட்டுரைகளைக் கொண்டு வெளியாகியுள்ள இம்மலர் நெதர்லாந்தின் இலங்கைக்கலாச்சாரக் குழுவினரின் கடுமையான நேர்த்தியான உழைப்பைப் காட்டிநிற்கிறது.

"வெற்றிகள் சாதனைகள் என்று இறுமாப்புக் கொள்ள எதுவுமில்லை. சஞ்சிகைகள், இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்புக்கள் என்ற எல்லைக்குள் சாத்தியமாகக்கூடிய யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு செல்லும் நிதானமான பயணம் இது. அவசர அறுவடைக்கு இதில் இடமில்லைத்தான். அனுபவமும் ஆற்றலும் ஆர்வமும் மிகுந்தவர்கள் இந்த 'இலக்கியச் சந்திப்பு' எத்தகைய பணிகளை எதிர்காலத்தில் சாதிக்க முடியுமென்று இணைந்து, ஆலோசனை நல்கி, செயற்பட்டு ஊக்கம் தருதல் எமது சிந்தனையின் செழுமைக்கு வழம் சேர்ப்பதாகும்" என்ற வெளியீட்டாளர்களின் குறிப்பு மனதில் இருக்கத்தக்கது.

இந்த மலரில் இடம் பெற்ற கட்டுரைகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. 16வது இலக்கியச் சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள்.
2. புகலிட கலாச்சார, அகதிகள் வாழ்க்கையைப் பாதிக்கின்ற அம்சங்கள் தொடர்பான பொதுவான கட்டுரைகள்.

முதற்பகுப்பில் அமைந்த சி.சிவசேகரத்தின் "தமிழ் உரைநடையிற் தரிப்புக்கள்" என்ற கட்டுரை பயன்மிகுந்த ஆராய்ச்சிக் கட்டுரையாகும். பத்துப் பக்கங்களில் அமைந்துள்ள இக்கட்டுரை தமிழில் எழுதுபவர்கள் தரிப்புக்குறிகள் இடுவது தொடர்பாக நடைமுறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. புகலிட சஞ்சிகையாளர்கள் தம் கையில் வைத்திருக்க வேண்டிய கையேடு இது எனலாம். பரந்த வாசகர்களைச் சென்றடைய வேண்டிய இக்கட்டுரை நூல் வடிவில் வெளிவருவது மிக நல்லது. கட்டுரையின் தலைப்புப் பற்றி ஒரு சிறு குறிப்பு: தரிப்புக்களையும், தரிப்புக்குறிகளையும் அவர் ஒன்றாகவே கருதியிருக்கிறார் போலும். தரிப்புக்கள் கருத்துபூர்வமானவை. தரிப்புக்குறிகள் அவற்றின் குறியீட்டு வெளிப்பாடுகள். "தமிழ் உரைநடையில் தரிப்புக்குறிகள்" என்று இக்கட்டுரையின் தலைப்பு அமைவதே மிகவும் பொருத்தமானதும் தெளிவானதுமாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கிளாறாசெற்கின் - பெண்ணிலைவாத முன்னோடி" என்ற மல்லிகாவின் கட்டுரை கிளாறாசெற்கினைப் பற்றிய மிகச் சிறந்த அறிமுகக் கட்டுரையாகும். பெண்விடுதலை தொடர்பான கட்டுரைகள் புகலிட சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளனவாயினும் இது போன்று பெண்ணிலைவாத முன்னோடிகள் பற்றி நன்கு ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளை அவற்றில் காண முடியாமல் போனது ஒரு குறைபாடேயாகும். அரைத்தமாவையே அரைத்துக் கொண்டிராமல் பெண்விடுதலை பற்றிய புதிய தேடல்களுக்கு நம்மை இட்டுச் செல்ல மல்லிகாவின் கட்டுரை பெரிதும் உதவும் எனலாம்.

"ஆசியாவும் தேசிய விடுதலைப் போராட்டங்களும்" என்ற அரசியல் கட்டுரையைச் சமர்ப்பித்துள்ள பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகரான யோசே மரியா சிசன் இன்றைய மாஓ சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவராவார். "உலகிலும் ஆசியாவிலுமுள்ள நிலமைகளையும் எழுத்தாளர்களின் கடமைகளையும் தீர்க்கமாக நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் மாபெரும் கம்யூனிஸ்டான மாசேதுங்கின் இலக்கியமும் சமுகமும் பற்றிய நூல்களை நாம் உதாசீனம் செய்ய முடியாது" என்று சிசன் தனது கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

"சிறார்களின் உலகம்: எங்களது அறியாமை பற்றி" என்ற லஷ்மியின் கட்டுரை நடைமுறை உதாரணங்களோடு சிறார்களின் உலகத்தைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரியத்தக்கது. "முன்னோர்கள் செய்ததைக் கண்மூடித்தனமாக கட்டிக்காத்தல் அல்லது பேணுதல் என்னும் சிந்தனையில் இருப்பதால்தானோ என்னவோ எங்கள் பிள்ளைவளர்ப்பு முறையும் கலாச்சாரத்துடன் இணைந்து எல்லாமே இன்று மிகப் பெரிய கேள்விக்குள்ளாக்கப்படும் நிலையில் உள்ளன". என்று லஷ்மி தன் கட்டுரையில் கேள்வி எழுப்புகிறார். பெற்றோர் மட்டுமல்ல, அனைவரும் கருத்தில் கொள்ளவேண்டிய பிரச்சனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

"மேடையில் பெண்கள்: தயக்கங்களும் தடைகளும் சாதனைகளும் " என்ற கட்டுரையை தமிழ் நாடக உலகில் நன்கு அறியப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனந்தராணி பாலேந்திரா சமர்பித்திருக்கிறார். பெண்களின் சரித்திரம் ஆழ்ந்து ஆராயப்பட்டு வரும் இக்காலத்தில் நாடக மேடையில் பெண்கள் பற்றிய ஆய்வில் ஆனந்தராணியின் இக்கட்டுரை முன்னோடிக் கட்டுரையாக நிறைந்த தகவல்களைக் கொண்டுள்ளது. நாடகமேடை, சினிமா, வானொலி ஆகிய அனைத்து ஊடகங்களிலும் நிறைந்த அனுபவம் கொண்ட இவர் தனது அனுபவங்களை மிகவும் அழகாக இக்கட்டுரையில் விபரிக்கிறார். ஆனந்தராணி தனது மேடை அனுபவங்களை இன்னும் விரிவாக எழுதுவது எமது கடந்தகால கலாச்சார சரித்திரதில் பெண்கலைஞர்களின் பங்களிப்பை விளங்கிக் கொள்ள உதவும்.

"நாடகம் பற்றி..." க.பாலேந்திரா எழுதியுள்ள கட்டுரை தேர்ந்த நாடகநெறியாளராகவும் நாடக நடிகராகவும் அறியப்பட்டவரான பாலேந்திரா எழுத்தாற்றலும் கொண்டவர் என்பதை வெளிப்படுத்துகிறது. லண்டனில் தமிழ்நாடக மேடையேற்ற முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் "வெற்று நிலத்தில் பயிரிடுவது போல செயலாற்றவேண்டிய நிர்ப்பந்தம்" என்கிறார் - புகலிட வாழ்வின் நிகழ்வுக்கலை முயற்ச்சிகளில் பாலேந்திராதான் தீவிரமாக உழைத்து வருகிறார். அவருடைய அநுபவப்பகிர்தலும் மலரின் பூரணத்துவத்திற்கு உரம் சேர்க்கிறது.

இரண்டாவது பகுப்புக்குள் அடங்கும் கட்டுரைகளில் "பிரான்சில் தமிழ்ச் சஞ்சிகைகள் - ஒரு வரலாற்றுப் பதிவு" ஏன்ற க.கலைச்செல்வனின் ஆராய்ச்சிக் கட்டுரை பிரான்சில் வெளியான அனைத்துச் சஞ்சிகைகளையும் பற்றிய தரவுகள் அனைத்தையும் திரட்டித் தருகிறது. கலைச்செல்வனின் நீண்ட கடின உழைப்போடு கூடிய ஆராய்ச்சித் தேடலை இக்கட்டுரை நிரூபணம் செய்கிறது.

"நெதர்லாந்தில் சிறு சஞ்சிகைகள்" என்ற தலைப்பில் சாள்ஸ் எழுதிய கட்டுரை நெதர்லாந்தில் வெளியான ஆறு சஞ்சிகைகள் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளது. இதேபோன்று வெவ்வேறு நாடுகளில் தோன்றிய சஞ்சிகைளின் சரித்திரத்தைப் பதிவு செய்து தொகுத்தல் பயனுள்ள முயற்ச்சியாக அமையும்.

"மாஸ்ரிக்ற் ஒப்பந்தம்" என்னும் பத்மமனோகரனின் கட்டுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பிய ஒன்றிணைவு பற்றியும் அதன் இறுக்கமான எல்லைகள் பற்றியும் குறிப்பிடுகிறது. ஐரோப்பிய இணைவு, செங்கன் ஒப்பந்தம், புதிய அரசில் சட்டங்கள் பற்றி பேசியும் எழுதியும் வருகின்ற இவரது கட்டுரையும் இம்மலரில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிடத்தக்கது.

"டச்சுப்பத்திரிகைகளில் தமிழர் பற்றிய பீதி" என்ற Teun A.van Dijk ன் ஆராய்ச்சிக் கட்டுரையும், "சமகால ஆசிய நாடக அரங்கில் வண்ணஜாலப் புரட்சிகள்" என்ற Eugene van Ervinன் ஆராய்ச்சிக்கட்டுரையும் இம்மலரில் இடம்பெற்றுள்ள சிறந்த கட்டுரைகளாகும்.

"ஐந்தாவது ஆண்டில் இலக்கியச் சந்திப்பு" என்னும் கு.பரராசசிங்கத்தின் கட்டுரை கடந்த இலக்கியச்சந்திப்புக்கள் பற்றிய ஒரு மேலோட்டமான பார்வையைச் செலுத்தியிருக்கிறது. ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்பு ஒரு ஐரோப்பிய இலக்கியச்சந்திப்பாக மாறியிருக்கிற சரித்திரத்தையும் இக்கட்டுரை சாற்றி நிற்கிறது.

ஆயினும் 15இலக்கியச்சந்திப்புகள் பற்றிய நிதானமான ஒரு மதிப்பீட்டை இலக்கியச்சந்திப்பு ஆர்வலர்களுக்கு தர இம்மலர் வெளியீட்டுக் குழுவினர் எண்ணியிருந்தால் அவர்கள் ஒரு குழுவினரிடம் மதிப்பீட்டுக் கட்டுரைகளை வாங்கிப்பிரசுரித்திருந்தால் அது மேலும் பயன் மிக்கதாய் இருந்திருக்கும். மலரின் இறுதியில் 16 இலக்கியச்சந்திப்புகளின் நிகழ்ச்சி நிரல் இணைப்பு பாராட்டத்தக்க முயற்சியாகும்.

"இந்த இலக்கியச்சந்திப்பு மலர் புகலிட இலக்கியத்தின் பல்திசைப்போக்கினையும் காத்திரமான புதிய தளங்களை நோக்கி நகர்ந்திருப்பதையும் உறுதி செய்யும் என்றே நம்புகிறோம்" என்ற வெளியீட்டாளர்களின் நம்பிக்கை உண்மையில் வீண்போகவில்லை.

பேணிப் பாதுகாக்கவேண்டிய ஒரு நல்ல மலர்தான்.

எஸ். பாலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலையை நோக்கி இந்தியப் பெண்களின் அனுபவங்கள்

மைத்திரேயி கிருஸ்ணராஜ்

வெகுஜனமட்டத்திலான பெண்கள் இயக்கத்தின் மத்தியிலும்சரி, சமூக இயக்கங்களின் மத்தியிலும்சரி இந்த இயக்கங்களின் 'அக்கறை'யிலிருந்து பெண்கள் எப்போதுமே தவிர்க்கப்பட்டே வந்துள்ளனர். பெண்கள் இயக்கங்கள் என்பன சமூகமாற்றத்திற்கான பொதுவான நீரோட்டத்திற்கு ரொம்பவும் புறந்தள்ளி நிற்கும் ஒன்றாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இத்தகைய நிலமையானது இயக்கங்களின் செயற்பாட்டினை பலவீனப்படுத்துவதாகவே அமைந்தது. ஏனெனில் பெண்களின் பங்களிப்பினைத் தவிர்த்து விட்டமையானது ,சிக்கல்பிக்கலான சமூக அரசியல் போராட்டங்களின் மீது முழுமையற்ற ஒரு அரைகுறைப் பார்வையையே தந்தது. பெண்களின் பங்களிப்பினைப்பற்றிய ஆய்வுகளும் சேர்த்துகொள்ளப்படும் பட்சத்திலேயே சமூக ஆய்வு பற்றிய அணுகுமுறைகள் நவீனத்துவமுற முடியும்.

பொதுவில் சமூக இயக்கத்தில் பெண்களின் பங்களிப்பு பற்றிய ஆய்வைப்பொறுத்தவரையிலும் சரி, அல்லது குறிப்பாக பெண்களின் கூட்டு நடவடிக்கை என்பதனைப் பொறுத்தவரையிலும் சரி பெரும்பாலான அடிப்படைப் பிரச்சனைகளின் சாராம்சமாயிருப்பது அரசியல் பற்றிய பிரச்சனையே ஆகும். அதிகாரத்தினதும் ஆளுமையினதும் சாறாகத் திகழும் அரசியலானது ஆண்களின் தனியுரிமையாகவே இருந்து வந்துள்ளது. அரசியல் சார்பு கொண்ட பெண்கள் வழிதவறிப்

www.tamilarangam.net

போனவர்களாக அல்லது பொது நடத்தைக்குப் புறம்பானவர்களாக அல்லது பெண்கள் தம்மை ஒருவித பிரத்தியேகமான முறையில் ஒழுங்கமைத்துக்கொள்ளும் விஷயமாக - அரசியல் என்று அங்கீகரிக்கப்படாமலேயே நோக்கப்பட்டு வந்துள்ளது. வர்க்கத்துக்குள் மட்டுமே வரையறுக்க முடியாத செல்வாக்குகள், தனித்துவ இனங்காணல்கள், இயக்கங்கள் என்பன குறித்த நவமான பார்வை நமக்கு இன்று மிகுந்த அவசியமாகிறது.

பெண்கள் இயக்கங்கள் இன்று பரவலாகி வருகின்றன; மூன்றாம் உலகில் அவைபெரும் இயங்கு விசையோடு செயற்பட்டு வருகின்றன. அரசியல் பாத்திரமேற்று வரும் பெண்களின் எழுச்சியானது பெண்களை non-political ஆக - அரசியல் சாராதவர்கள் என்று நிலவிய கருத்தோட்டத்தை நிராகரித்துள்ளது. உணவு, வீடு, உடல்நலம் போன்ற அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற பெண்களின் கோரிக்கையானது இன்று மூன்றாம் உலகில் பெண்களின் கூட்டுநடவடிக்கையின் நிரந்தர கோஷமாகி யுள்ளது. இவர்கள் தனித்து பெண்களின் தேவைகளை மட்டுமே கோருகிறார்கள் என்றில்லை. இந்தக் கோரிக்கைகளை வெளிப்படுத்துவதன் மூலம் பால்ரீதியான தொழிற்பாகுபாட்டின் விளைவாய் தமக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்பிற்கு பதிலளிக்க முனைகிறார்கள். இது பல்வேறு பிரச்சனைகளை எழுப்புகிறது:

1. சரித்திர மாற்றத்தின் பரந்த பின்னணியில், விஷேசமாக முதலாளித்துவ வளர்ச்சிச் செய்முறைகளுக்குள் பெண்களின் கூட்டு நடவடிக்கைக்கான இடத்தை நிர்ணயித்தாக வேண்டிய தேவை.

2. குடும்பம் போன்ற தங்களுக்கு மிகவும் நெருக்கமான பிராந்தியத்துக்குள் ஏற்படும் மாற்றங்கள்.

3. பெண்களது இயக்கங்களை முக்கியமான தனித்த ஒரே யொரு குணாம்சம் கொண்டதாகக் குறுகிய எல்லைக்குள் கொண்டு போவதில் ஏற்படும் கஷ்டங்கள்

இவற்றில் எத்தனை வேறுபாடுகள் இருந்தபோதும், பால் ரீதியான அந்தஸ்து பேதம் அல்லது பெண்களுக்கு குறைந்த தராதரமே வழங்கப்படுதல் என்பது போதுமான அளவிற்கு எங்கும் வியாபகமாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் இயக்கம் தொடர்பான பல பொதுவான தவறான கருத்தோட்டங்களுக்கு இந்தியப் பெண்களின் இயக்கம் சவால் விட்டுள்ளது. பால்ரீதியான பிரச்சனைகளையும் வர்க்கப் பிரச்சனைகளையும் இணைத்து நோக்கியதன் மூலமும் பரஸ்பரம் நன்மைகளை விளைவிக்கும் வகையில் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பெண்களும் தமது பிரச்சனைகளை வெளிப்படுத்திய வகையிலும் இந்த சவால்கள் அமைந்தன.

காலப்போக்கில் பெண்கள் பங்கு கொள்ளும் முறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. முதலாவது கட்டத்தில், பெண்களின் பங்களிப்பானது வர்க்கம் பற்றிய பாரம்பரியக் கண்ணோட்டம் சார்ந்ததாக அமைந்தது. அதாவது, பெண்கள் பொதுவான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களில் பங்கு கொள்ள ஆரம்பித்தல்:

தொழிற்சாலை வேலை நிறுத்தங்கள்,
காணிக்கான விவசாயிகள் இயக்கம்,
கூடிய சம்பளம் கோரி விவசாயக் கூலிகளின் போராட்டம்,
விலைவாசி உயர்விற்கான போராட்டங்கள் போன்றன. இத்தகைய போராட்டங்களில் பெண்களின் ஈடுபாடானது புதிய பெண்கள் அமைப்பிற்கான தளத்தை ஸ்தாபிதம் செய்தது.

1975ஐ அடுத்து, இடதுசாரிக்கூட்டு அல்லது இடதுமல்லாத வலதுமல்லாத நடுநிலை அரசாங்கங்கள் என்று இருந்தவற்றிற்கு மாறாக இன்னுமொரு மாற்றத்திற்கான தேடல் எழுந்தது. 1979-80ல் இந்தியாவில் பூர்ஷ்வா அரசு நன்கு ஸ்திரம் பெற்று விட்டது. பழங்குடிகளின் கிளர்ச்சி, 'தலித்' மக்களின் எதிர்ப்புகள், வெகுஜன விஞ்ஞான இயக்கங்கள் போன்ற சகல விதமான வெகுஜன இயக்கங்களின் துரிதமான வளர்ச்சியின் மத்தியிலேயே இவை நடந்தேறின. இந்தப்புதிய சமூக இயக்கங்கள் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவை அல்ல என்றும் சொல்லி விடுவதற்கில்லை. கட்சி எல்லைகளுக்கு அப்பால் தொழிலாள வர்க்கத்திற்குள் நடைபெற்றுக்கொண்டிருந்த வளர்ச்சியின் பிரதிபலிப்புக்களே இவை.

இந்தியாவில் பெண்கள் இயக்கத்தின் சமூகப் பொருளாதாரப் பின்னணியைப் பற்றிய சுருக்கமான குறிப்பு இங்கு பயனுடையாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கும். இந்தியாவில் பெரும்பான்மையான பெண்கள் தங்களுடைய அன்றாட ஜீவனத்திற்காகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் கிராமப்புற மக்களாவர். தங்களுடைய தொழில் நிலமைகள் மீதோ அல்லது அவர்களின் உழைப்பின் உற்பத்திப் பொருள்மீதோ அவர்களின் விருப்பு, வெறுப்பிற்கு எந்த வித இடமுமில்லை. தங்கள் வீட்டையும் குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பை இவர்கள் மிகவும் அரிதான மூல வளங்களுடன் கடுமையான கஷ்டத்துடன்தான் கொண்டுநடத்த வேண்டியுள்ளது. அடிப்படையான அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக்கூட அவர்கள் மணிக்கணக்கில் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. தண்ணீர் அள்ள, விறகு போன்ற எரி பொருள் சேகரிக்க, காய்கறிகள் பயிரிட, வீட்டு மிருகங்களைப் பார்த்துக் கொள்ள, கைக்குற்றல் அரிசி போன்ற உணவுப்பண்டங்களைத் தயார் செய்தல், துப்பரவு செய்தல், உலர்த்துதல், சேகரித்து இருப்பில் வைத்தல், புகைவிடும்'ஸ்ரவ்' களில் சமைத்தல், தரையை மெழுகிட்டுப் பேணுதல், கூரையைத் திருத்துதல் போன்ற விஷயங்கள் அனைத்தையும் பெண்களே செய்தனர். மறு வார்த்தைகளில் சொல்வதானால், வீட்டுத்தேவைகளுக்கான மனித சக்தியின் 70 வீதத்தினை பெண்களே நல்குகின்றனர். இருந்தும் அவர்களுக்கு நிராகரிகப் பட்ட விஷயங்கள் பல: போஷாக்கு, சுகாதாரம், கல்வி என்பவற்றில் பாரபட்சம், காணியுரிமை இன்மை போன்றன.

இந்தப் பின்னணியில்தான் புதிய உயர்குலத்தினரின் ( new elites) தோற்றம் இடம் பெற்றது: ஆண் மேலாதிக்கத்தை தக்க வைத்துக் கொள்வதில் ஆர்வம் மிகுந்த வலிமை வாய்ந்த நில உடமையாளர்கள் ( உயர்மட்ட மத்தியதர விவசாயிகள்) விவசாயிகள் குடும்பத்தின் தந்தைவழி அமைப்போடு சீதனமானது மிகுந்த நெருக்கத்தைக் கொண்டிருந்தது. மேல் மட்டத்தை நோக்கி உயர்வதற்காக பணத்தை நாடி நின்ற அல்லது மிகுந்த இழப்புகளை எதிர் நோக்கியும் செல்வந்தாரவதில் பேரார்வம் கொண்டிருந்த புதுப் பணக்காரக் குழுவினர், பார்வைக்குத் தெரியத்தக்க பண்ணை வேலையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் தத்துவார்த்தத்தைத் தவிர்த்து விட்டு, எப்படியோ பெண்களின் உழைப்பு தேவையாய் இருந்தது; நிலச்சுவாந்தர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் வீடுகளுக்குள்ளேயே அறுவடைக்குப் பிந்திய வேலைகளையும், கூலி உழைப்பாளர்களுக்கு சாப்பாடு போடுவது, கூலி வேலையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்பார்வை செய்வது போன்ற வேலைகளையும் செய்தனர். அவர்கள் முன்பு செய்து வந்த வேலைகளை இப்போது கூலி உழைப்பாளர் செய்து வருகின்றனர். குடும்பத்தின் செழிப்பை வீட்டிற்கு TV வாங்குவதில் வெளிப்படுத்தினாலும் கூட பெண்கள் வீடுகளுக்குள் புராதனகால வேலை நிலமைகளிலேயே தொடர்ந்தும் உழலுகின்றனர். ஆண்கள் விஸ்தாரமான தங்கள் இரத்த உறவுகளைச் சேர்ந்த பிற ஆண் சகபாடிகளுடன் நன்கு இணைந்துகொண்டு விடும் அதே நேரத்தில் பெண்களுக்கோ அதிகாரத்தின் மீது ஒரு பாத்தியதையும் இல்லை. பெண்களின்மீதான சாதிக் கண்காணிப்பு, சீதன வழக்கம் பரவலாகுதல், கூடிய பட்சப் பெண்கள் மரண வீதம், குடித்தொகையில் பெண்களின் பற்றாக்குறை என்பன போன்ற இதன் விளைவுகள் மிகவும் தெளிவானது. நகரச் சூழ்நிலைகளும்கூட புதிய விழுமியங்களை உருவாக்குவதில்லை. ஏனெனில், கிராமப் பகுதிகளுடனான குடும்ப, சாதி உறவுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதில் ஒரு போஷிப்புத் தன்மை உண்டு. பல குடும்பங்கள் தாய்மாருக்கு உரிய கௌரவத்தை வழங்குகின்றன. இவை தங்கள் மருமகள்மாரின் மீது சட்டபூர்வமான அதிகாரத்தைப் பலப் படுத்த துணை புரிகின்றன.

காணி நிலமற்ற ஏழைகளைப் பொறுத்தவரையில்- பெண்கள் மிகவும் குறைந்த சம்பளத்திற்கே தொழில் செய்து வருகின்றனர். இங்கும் இயந்திரமயமாக்கத்தால் உள்ள வேலை வாய்ப்புகளுமே இல்லாமல் போய் விடுகின்றன. கைவினைஞர் குடும்பங்களில் பெண்கள் அடிப்படையான உற்பத்திக் கருவிகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். பெண்கள் இந்த உற்பத்திக்கருவிகளுடன் புழங்கினால் "தீட்டுப்பட்டு விடும்" என்ற பல்வேறு நம்பிக்கைகளின் கீழ் இது நியாயப்படுத்தப்பட்டு விடுகிறது. காடுகள் அழிந்து போவதாலும், காணிகளை அரசு கையேற்பதாலும் பழங்குடிப்பெண்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். நகர்ப்புறத்திலோ ஒழுங்குப்படுத்தப்பட்ட தொழிற்துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்புக்கள் மிகவும் குறைந்து வருகின்றன. இயந்திரங்கள் இவர்களுக்கு பிரதியீடாக வந்துவிட்டது. ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் பெண்களுக்கு வேலை கிடைத்துவிடுகிறது ஏனெனில் பெண்களின் உழைப்பு மலிவானதாயும், எளிதாகக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. படித்த மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் சட்டரீதியாகச் சில நன்மைகளை அடையக்கூடியதாகவிருந்தாலும் பல்வேறு வழிகளிலும்

www.tamilarangam.net

இவர்கள் பாரபட்சமாகவே நடத்தப்படுகிறார்கள். குடும்பத்தின் கண்காணிப்பு மற்றும் இரட்டைச்சுமை ஆகியன மூலமாக இப்பாரபட்சம் தொடர்கிறது.

1980களில் மத்தியதர வர்க்கப் பெண்களையும் தொழிலாளர் வர்க்கப் பெண்களையும் ஒருங்கிணைத்து பல்முனைப்பட்ட போராட்டங்களிலும் சகல பெண்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை வெளிப்படுத்தியது. மதுரா என்ற ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப்பெண் மீது இரண்டு பொலிஸ்காரர்கள் பாலியல் வன்முறை செய்ததையடுத்து நாடு தழுவி எழுந்த கிளர்ச்சியானது ஒரு புதிய கட்டத்தைத் தொடக்கியது. இந்த இரண்டு பொலிஸ்காரர்களும் உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதும், இந்தத்தீர்ப்பு மாற்றப்படவேண்டுமென்று பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நடைமு றையிலுள்ள பாலியல் வன்முறைச்சட்டங்கள் மீது மிக விரிந்த வாதங்களை தோற்றுவித்தது; பாலியல் வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் பெண்கள் அமைப்புகள் குறித்து ஸ்தாபனமயமான இடதுசாரி கட்சிகளின் பல்வேறு பெண்களின் அணிகள் பெண்களின் பிரச்சனைகளை முன் எடுத்தன.

60களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பெண்களின் தேசிய கூட்டமைப்பு இயங்கி கொண்டிருந்தது. இதனையடுத்து ஜனதா கட்சியைச் சேர்ந்த மஹிலா தக்ஷித்த சமித்தி, இந்திய கம்யூனிஸ்ட்கட்சி (மார்க்ஸிஸ்ட்) யைச் சேர்ந்த ஜனவாடி மஹிலா சபா, மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளின் பெண்கள் கூட்டு நடவடிக்கைக் குழு போன்ற மாதர் அமைப்புகளும் செயற்பட ஆரம்பித்தன. மகாராஷ்டிரத்தில் லால் நிஷான் கட்சியைச் சேர்ந்த "ஸ்திரீ முத்தி சங்காதனா" பெண்களை அடிக்கும் பிரச்சனையையும், குடித்துக் கொண்டு திரியும் ஆண்கள் பிரச்சனையையும் முன்னெடுத்தது. ஹைதராபாத்தில் முற்போக்கு பெண்கள் அமைப்பு பெண்களை கேலி செய்யும் பிரச்சனையை முன்னெடுத்தது. அதேவேளையில், சேவா, அன்னபூர்ணா, உழைக்கும் பெண்கள் அரங்கம் போன்ற அமைப்புகள் கடன் பெறும் வசதி, வேலை நிலைமைகளில் முன்னேற்றம், பொலிஸ் அட்டூழியங்களை எதிர்த்தல் ஆகிய பிரச்சனைகளில் பெண் தொழிலாளர்கள் அமைப்பாகினர். இவை அனைத்துமே மத்தியதர வர்க்க தலைமையைக் கொண்டிருந்தும் ஏழைப் பெண்களுக்காக, அவர்களை வெறுமனே சமூகநல உதவிகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களாக அல்லாமல் அவர்களை சக்தி மிகுந்தவர்களாக மாற்றும் பணியில் செயற்பட்டன. இந்த அமைப்புகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்க கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்தவும் ஆரம்பித்தன. இந்த அமைப்புகளின் அங்கத்துவ எண்ணிக்கையும் பல்லாயிரமாக அதிகரிக்க ஆரம்பித்தது. தமிழ் நாட்டின் பெண்ணுரிமை இயக்கம் உழைக்கும்பெண்கள் மத்தியிலிருந்து மட்டும் மூவாயிரத்திற்கும் அதிகமான அங்கத்தவர்களைக் கொண்டு விளங்குகிறது. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் இத்தகைய வெகுஜன அமைப்புகள் உள்ளன. பெண்கள் பிரச்சனை குறித்தும் சிவில் உரிமைகளுக்காகவும் தொழிலாள- விவசாய போராட்டங்களில் இணைந்தும் சிறிய நகர்ப்புற மத்தியதர வர்க்கப் பெண்கள் குழுக்கள் போராட ஆரம்பித்தன. ஏழைப் பெண்களின் காணியுரிமைக்கான சட்டரீதியான போராட்டங்களிலும் பல அமைப்புகள் இறங்கின. வெவ்வேறு இடங்களில் புதுபுதுக் கிளர்ச்சி வடிவங்களையும் புதிய போராட்ட வடிவங்களையும் பெண்கள் முன்னெடுத்தனர். பல பெண்கள் மாநாடுகளில் அடிமட்டத்தை சேர்ந்த பெண்கள் பங்குகொண்டனர். 1990ல் களிக்கட்டில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் இந்தியா எங்கணுமிருந்து ஐயாயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர். 1988ல் ஷேத்காரி சங்காதனா என்ற விவசாயிகள் அமைப்பு நடத்திய விவசாய பெண்களின் மகாநாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். பம்பாயில் பெண்கள் ஒடுக்குமுறைக்கெதிரான கூட்டு நடவடிக்கைக்கான அரங்கில் பெண்களின் கூட்டு அமைப்புகளும் உருவாகின. மகாராஷ்டிரத்தில் இயங்கும் ஸ்திரீ முக்தி அன்டோலன் சம்பாக் சமித்தியில் மட்டும் முப்பது பெண்கள் அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. பொதுப் பிரச்சனைகளில் குரல் கொடுப்பதற்காக இந்தக் கூட்டமைப்புகள் சேர்ந்து செயற்படுகின்றன.

இக்கட்டத்தில் சீதனம் பாலியல் வன்முறை (நிலச்சுவந்தரால் அல்லது பொலிஸ், இராணுவத்தால்) தொழில் செய்யும் இடங்களில் பெண்கள் பால்ரீதியாக சுரண்டப்படுதல், விபச்சாரம், கேலி செய்தல், சமசம்பளம், பெண்களின் தனிப்பட்ட உரிமைகள், வேலைபார்க்கும் பெண்களின் விடுதிகள், வீட்டில் வன்முறைக்குள்ளாகும் பெண்கள் குறுகிய காலத்திற்கு தங்கியிருப்பதற்கான இல்லங்கள், ஆலோசனை மையங்கள், உடனடித் தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற பல்வேறு பிரச்சனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. விவசாயப் பெண்களும், பழங்குடிப் பெண்களும் அமைப்புகளாகி செயற்பட்டனர். இதனைவிட சேரிகளை அப்புறப்படுத்தும் பிரச்சனை, கழிவிடவசதிகள், தண்ணீர் வசதி, வீட்டுவசதி

www.tamilarangam.net

போன்ற பிற தேவைகள் பற்றியும் அக்கறை காட்ட ஆரம்பித்தனர். மத்திய பிரதேசத்திலும் வடகிழக்கிலும் மதுவிலக்கு இயக்கங்கள் செயற்பட ஆரம்பித்தன; தெரு வீதிகளில் ரோந்து பார்க்கவும் தவறு இழைக்கும் ஆண்களைத் தண்டிக்கவும் பெண்களின் கண்காணிப்புக்குழுக்கள் இயங்கின. கைவிடப்பட்ட அநாதரவான பெண்களும் அமைப்பாகினர். உள்ளூர் நிர்வாகச் சபைகளுக்கும் மாநில பேரவைகளுக்கும் பெண்களை தெரிவு செய்வதற்கு உதவும் முகமாக அரசியற் கல்விக்குழுக்கள் பணிபுரிந்தன. உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய கருத்தடைமுறைகளுக்கு எதிராகவும் தேசிய மட்டத்தில் பிரச்சாரம் முனைப்புப் பெற்றது. நுகர்வோர் நடவடிக்கைக்குழுக்கள் தன்னார்வ நடவடிக்கைக்குழுக்கள் ஆகியவற்றின் கருத்தரங்குகள் இடம்பெற்றன. இந்த அமைப்புகளில் பெண்களே அங்கத்தவர்களாய் இருந்ததுடன் பெண்களின் பிரச்சனைகளே இங்கு விவாதிக்கப்பட்டன. அண்மைக்காலத்தில் பல குழுக்கள் இனவாதத்திற்கு எதிராகவும் செயற்பட ஆரம்பித்துள்ளன. அரசாங்கம் கண்ட்ராக்டர்களுக்கூடாக சாராயம் விற்பனை செய்வதை எதிர்த்து ஆந்திராவைச் சேர்ந்த பெண்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பது அண்மைக்கால உதாரணமாகும். கிராமிய ஏழைப் பெண்களே இக்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கிளர்ச்சி ஏறத்தாழ 800 கிராமங்களில் பரவியது. பெண்கள் சாராயக்கடைகளை உடைத்தனர்; சாராய கண்ட்ரக்டர்களை பிடித்து வைத்துக்கொண்டனர். தங்களது வீட்டு ஆண்கள் இந்த சாராயக்கடைகளுக்கு போவதைத் தடுத்து நிறுத்தினர். இந்தக் கிளர்ச்சி வெற்றிகரமாக நடந்ததையடுத்து, அரசாங்கமானது சாராய வியாபாரத்தை தடைசெய்யவேண்டியதாயிற்று. கலால் அதிகாரிகளையும் கலால் பொலிஸாரையும் பெண்கள் எதிர்கொண்டனர். சாராய விற்பனை என்பது பல்வேறு பிரச்சனைகளை எடுத்துக்காட்டியது.

மோசமாகிக் கொண்டிருக்கும் பொருளாதார நிலமை, உடுபுடவைகள், பாத்திரங்களைக்கூட அடகு வைக்கவேண்டிய நிலைமை, கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகளின் உயர்வு, அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலை போன்ற பிரச்சனைகள் துலாம்பரமாகின. பெண்கள் தமது ஆண்களை கிறிமினல்களாக நோக்காது, இவற்றால் பாதிக்கப்பட்ட நபர்களாக கருதினர். சாராயத் தவறணை போன்ற பொது இடமொன்றில் தமது ஆண்களை தங்களால் சாமர்த்தியமாக கையாளமுடியும் என்பதில் பெண்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். பெண்களின் கூட்டங்களில் ஆண்கள் கூட கலந்துகொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் பேசினார்கள்:

"பெண்களாகிய எங்களுக்கு என்ன தெரியும்? வேலைக்குப் போவதும், பிறகு வேலையிலிருந்து திரும்புவதும் தான். முழுநாளும் முதுகுடைந்து போய்விடுகிறோம். வீடு திரும்பியதும் சமையல் செய்து பிள்ளைகளுக்கும் குடும்பத்திற்கும் பரிமாறவேண்டும். ஆண்களுக்குத்தான் எல்லாம் தெரியும். அவர்கள் உலகத்தின் எந்த மூலைக்கும் போகலாம்; குடிக்கலாம். சாராய விற்பனையிலிருந்து வரும் காசில்லாமல் அரசாங்கம் நின்று பிடிக்க முடியாதா? அப்படியானால் அரசாங்கம் எங்களது ஆம்பிளைகளையும் எடுத்துக்கொண்டு விடட்டும்."

இந்த இயக்கம் மிகவும் அசாதாரணமானது. இவர்கள் வறிய கிராமியப் பெண்களாவர். இவர்களுக்கு மத்திய தலைமை எதுவும் கிடையாது. கைது செய்வதென்றாலும் முக்கியமான தலைவர் என்று யாருமில்லை.

இந்த வளர்ச்சிகள் இந்த பெண்ணிலைவாதத்தின் காத்திரமான அபிவிருத்திகளை, அவை எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுகின்றன என்பதனை தெளிவாகக் காட்டுகின்றன.

**இக் கட்டுரை 7.08.1993 இல் நெதர்லாந்தில் நடைபெற்ற 16 வது இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப்பட்டது:மைத்ரேயி கிருஷ்ணராஜ் ஒல்லாந்து-டென்ஹாக் சமூகக்கல்வி நிறுவனத்தில் பணியாற்றுகிறார்.**


***இலங்கை கலாச்சாரக்குழு வெளியீடுகள்***

*1. 'அஆஇ' புகலிட சிறுகதைகள் சிறப்பிதழ்*
*(புகலிட எழுத்தாளர்களின் கதைகள்)* *விலை fl. 6,-*

*2. 16வது இலக்கியச்சந்திப்பு மலர்*
*(12 கட்டுரைகள் அடங்கியது)* *விலை fl. 10,-*

***தொடர்புகளுக்கு:***
*A AA IE,Postbus 85326,3508 AH utrecht,Netherlands*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத் தீர்வா...?

இன்று உலகம் முழுவதும் பேசப்படுகின்ற அரசியல் நிகழ்வாக 'பாலஸ்தீனம்' அமைந்துவிட்டது. கடந்த 60 ஆண்டுகால் போராட்ட வரலாறு இது. சியோனிச இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தைக் கோரி நிற்கும் போராட்டமிது. போராட்டத்தோடு இணைக்கப்பட்ட அமைப்பு 'பலஸ்தீன விடுதலை இயக்கம்'. பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் அதன் தலைவர் யசீர் அரபாத்துக்கும் உலகம் முழுவதும் கொடுக்கப்பட்ட ஆரவு இந்த நூற்றாண்டில் வேறெதற்கும் கிடைத்திருக்காது. ஆயினும் போராட்டம் தொடர்கிறது.

பலஸ்தீன மக்களின் துயர்நிறைந்த வாழ்க்கையும், அகதிகளாக சின்னாபின்னப் பட்டுப்போய் கிடப்பதும் ஒரு புறமிருக்க, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலும் - அகதிகளாகவுள்ள பிரதேசங்களிலும் தொடர்ச்சியான போராட்டமும், மனிதாபிமானம் மிக்க இஸ்ரேலிய பொது மக்களின் ஆதரவும் உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் ஆதரவும்தான் இன்று இந்நிலமைகளுக்காவது கொண்டு வந்து விட்டுள்ளது.

பலஸ்தீன விடுதலைஇயக்கத்தையும் அதன் தலைவர் அரபாத்தையும் பயங்கரவாதியாக் காட்டி அமெரிக்காவும் மேற்குலகும், சியோனிச இஸ்ரேலுக்கு முண்டு கொடுத்து போராட்டத்தை நசுக்கியதோடு, எந்தவிதமான பேச்சுவார்த்தைளையும் நடத்த மறுத்ததும் கடந்தகால சரித்திரங்கள். ஆனால் இன்று வெள்ளைமாளிகைக்கு அரபாத்தை கைச்சாத்திட அழைப்பது முக்கியமான விடையங்கள்தான்.

www.tamilarangam.net

பலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளான காசா, மேற்கு யோர்டான் போன்ற பகுதிகள் திரும்பவும் பலஸ்தீனியர்கள் வசமாவதும், பலஸ்தீனம் ஒரு சுயாட்சிப் பிரதேசமாவதற்கான ஒப்பந்தங்கள் தொடரலாம் என்பதே கருத்தாய் உள்ளது. அகதிகள் மீளக்குடியேறுவது, அமைதி நிலவுவது போன்ற விடையங்களில் கைசாத்துக்கள் நடைபெறவுள்ளன.

இத்தனைகால இழுபறிக்குப் பின் இப்பேச்சு வார்த்தைக்கான தயாரிப்புக்கள் நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சருக்கூடாக நடத்தப்பட்டதாகவே கூறப்படுகிறது. நோர்வே இவ்வகை பிரச்சனைகளில் மத்தியஸ்தம் வகிக்கும் நாடாகவே இன்று கருதப்பட்டு வருகிறது.

அண்மையில் இலங்கையின் இனப்பிரச்சினையில் நோர்வேயின் நோபல் பரிசு பெற்ற சிலர் அக்கறைப்பட்டு இலங்கையரசுடன் பேசியிருப்பதும் குறிப்பிடக் தக்கவொன்று. அது ஒரு புறமிருக்க நோர்வேஜிய மக்களுடன் இணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழர் ஆதரவுக்குழு ஒன்றை அமைப்பதும், அதன் முன்னோட்டக்குழுவின் வேண்டு கோளும் கவனிக்கத்தக்கன. "இலங்கையில் அமைதிக்கும் நீதிக்குமான நடுநிலமை வகித்தல் என்பது சவாலான ஒரு விடையம்தான். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்வதற்கு திறமையும் காலமும் தேவை. அத்துடன் நடுநிலமை வகிப்பும் கண்காணிப்பும் அவசியம். நடுநிலமையாளார் இலங்கையரசினதும் விடுதலைப் புலிகளதும் ஏனைய அமைப்புக்களதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய தராதரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். எமது கருத்துப்படி நோர்வே இந்தத் தகமையைக் கொண்டுள்ளது. நோர்வேஜிய அரசியல்வாதிகளைக் கொண்ட குழுவால்இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியுமானால் அதுவே ஒரு வெற்றியாகும். ஆகவே நோர்வே அரசியல் வாதிகளும் அமைதி நடவடிக்கையாளர்களும் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை காட்ட வேண்டும் எனக்கோருகிறோம். அத்துடன் இலங்கை இனப் பிரச்சனையில் அக்கறை கொண்டுள்ள நோர்வே மக்களும் சமாதான விரும்பிகளும் இந்த உதவிக்குழுவுடன் இணைந்து தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணியப் பார்வைகள் மூன்று தொடர்பாக

சி.சிவசேகரம்

0. விமர்சனத்தைப் போல வெறுக்கப்படுவன அனேகமில்லை. படைப்பாளிகள் புகழை நாடியே படைக்கும் போது விமர்சனங்கள் பாராட்டுரைகளாக அமைவதை விரும்புவது இயல்பு. இயல்பானவை எல்லாஞ் சரியானவையாகா. நம் மத்தியில் விமர்சனம் என்பது நயப்பாகவும் மிகையான புகழுரையாகவும் இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகையிற், குறைகளைச் சுட்டிக்காட்டும் விமர்சனங்கள் பகைமையுணர்வுடன் எழுதப்பட்டதாகவே தோன்றக்கூடும். காழ்ப்புணர்வுடன் எழுதப்படும் விமர்சனங்களை அடையாளங்காண்பது சிரமமில்லை. ஆயினும் குறைகளைச் சுட்டிக்காட்டும் நேர்மையான விமர்சனங்களைப் பற்றிய ஆரோக்கியமான பார்வையைப் படைப்பாளிகள் விருத்தி செய்வது நல்லது.

ஒரு விமர்சனம் படைப்பாளியின் விருப்புக்கு உகந்ததல்லாதபோது, விமர்சகரின் தகுதி பற்றிய கேள்விகளை எழுப்புவதைவிட, விமர்சனத்தின் தரம் பற்றி ஆராய்வது விமர்சனத்துக்கும் நல்லது. இன்று விமர்சகர்கள் தனிப்பட்ட முறையிலான தாக்குதல்கட்கு ஆளாவது தவிர்க்கவியலாதது. அதற்குப் பயப்படுகிறவர்கள் விமர்சனத்துறையில் நிலைப்பது கடினம். விமர்சனம் என்பது "குணம் நாடிக் குற்றமும் நாடிச்" சீர்தூக்குஞ் செயல். இல்லாத குணங்களைக்கூட இருப்பதாகக் காட்டும் பம்மாத்துச் சூழலொன்றில் உண்மையாகவே இருக்கிற குறைகளைக் காட்டுகிற விமர்சகர்கட்குத் தேவை அதிகம். இத் தேவையை நிறைவு செய்கிறவர்களுள் நான் ஒருவனாக இருக்கக்கூடும். என் விமர்சனங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியவையே.

சமூக உணர்வுள்ள எழுத்து, சமுதாயத்தின் விமர்சனமாகிறது. அத்தகைய படைப்புக்களின் விமர்சனங்கள் ஒரு வகையில் விமர்சனங்களின் விமர்சனங்களே. பெண்ணுரிமையாகத் தொடங்கிப் பெண்ணியம் அல்லது பெண்ணிலைவாதமென்ற கருத்தாக்கம் ஆணாதிக்கச் சமுதாயத்தின் மீதான கடுமையான ஒரு விமர்சனமே. தேசிய விடுதலைப் போராட்டம், இனச்சமத்துவத்துக்கெதிரான போராட்டம், சாதியத்திற்கெதிரான போராட்டம் என்பன போன்று பெண்ணுரிமைப் போராட்டமும் நீண்ட காலமாகத் தொடரும் ஒடுக்குமுறைக்கெதிரான ஒரு நியாயமான, அவசியமான போராட்ட வடிவமாகும். இப் போராட்டங்களை அடிப்படையான சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்தினின்று பிரிக்க முடியாது. உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் வர்க்கங்களாகப் பிளவுண்டுகிடக்குஞ் சமுதாய அமைப்புக்களில் வர்க்க முரண்பாடே அடிப்படையானது எனவும் வர்க்கப் போராட்டத்தின் தீர்வே சுரண்டலற்ற சமத்துவ சமுதாயத்துக்கு வழியமைக்கும் எனவும் கூறுவது மாக்ஸிய நிலைப்பாடு.

வர்க்கப்போராட்டத்தின் முலம் மானுட சமதர்மம் நிலைபெறும் வரை, மற்றப் போராட்டங்கள் ஓய்ந்திருக்க வேண்டும் என்பதோ அத்தகைய போராட்டங்கள் சமுதாய மாற்றத்துக்குத் தடையானவை என்பதோ மாக்ஸிய நிலைப்பாடல்ல. ஆயினுங் குறுகிய தேசியவாதிகள் மாக்ஸியம் தேசிய விடுதலையை நிராகரிக்கிறது என்று தொடர்ந்துஞ் செய்துவரும் பொய்ப் பிரசாரம் போன்று சாதிய எதிர்ப்புப் போராளிகள் மத்தியிலும் இனவாத எதிர்ப்பியக்கத்தினர் மத்தியிலும் வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இத்தகைய போக்குக்குப் பெண்ணுரிமைப் போராட்டம் விலக்கல்ல.

பெண்ணிய (அல்லது பெண்ணுரிமை) இயக்கத்துள் வர்க்க, தேசிய அடிப்படையிலான ஒடுக்கல்களைக் கணிப்பிற் கொள்ளாது ஆண்-பெண் முரண்பாட்டையே அடிப்படையான சமுதாய முரண்பாடாகக் கருதும் ஒரு போக்கு, வசதி படைத்த வகுப்பினர் மத்தியிற் தொடர்ந்தும் நிலவுகிறது. இத்தகைய போக்கு சமுதாயத்தின் வர்க்க அடிப்படையை மாற்றுவது பற்றிக் கவலைப்படுவதில்லை; தேசியஇன ஒடுக்கலையோ

www.tamilarangam.net

சாதி, நிறம் போன்ற அடிப்படையிலான ஒடுக்கல்களையோ பற்றி அதிகம் அக்கறைப்படுவதில்லை. எவ்வாறு குறுகிய தேசியவாதிகள், பிற தேசிய இனத்தவரைப் பகைவராகக் காட்டி, மாக்ஸியவாதிகளை ஒதுக்க முற்பட்டனரோ அவ்வாறே மேற்கூறிய பிரிவினரும் செயற்பட்டுள்ளனர். அதேவேளை, சுற்றாடல் தொடர்பான பிரச்சனைகளிலும் ஆதிவாசிகளது உரிமைக்காகவும் முன்னின்று போராடியும் போராட்டங்கட்குத் தலைமை தாங்கியும் அதன் மூலம் ஒடுக்கப்பட்ட பெண்களது உரிமைக்காக மட்டுமன்றி அவர்களது போராட்ட உணர்வை உச்சப்படுத்தவும் உழைக்கின்ற பெண்ணுரிமைப் போராளிகளும் உள்ளனர்.

மாக்ஸியம் பெண்களுக்காகப் போராடச் சுயாதீனமான அமைப்புக்கள் இருப்பதை நிராகரிக்கவில்லை. பெண்களின் சமத்துவத்தைப் பற்றிய முதலாவது உரத்த குரல்களிற் பெருவாரியானவை மாக்ஸியச் சிந்தனையால் வழிநடத்தப்பட்டவையே. பால் அடிப்படையிலான சமத்துவத்தை மறுக்கும் எவரும் மாக்ஸியவாதியாக இருக்க முடியாது. ஏனெனிற் பெண்ணுரிமை மாக்ஸியத்தினின்று பிரிக்கவியலாதவொன்று. பெண்ணுரிமைப் போராட்டத்தைப் பிற ஒடுக்குமுறைகட்கு எதிரான போராட்டங்களினின்று பிரித்துத் தனிமைப்படுத்துவதை மாக்ஸியவாதிகள் கண்டிப்பது நியாயமானது. இது பெண்கள் தமது உரிமைகட்காகப் போராடும் அமைப்புக்களை மறுக்கும் காரியமல்ல. குறுகிய தேசியவாதம் போன்று, தன்னையும் பிற நியாயமான போராட்டங்களையும் பலவீனப்படுத்தும் போக்கையே மாக்ஸியவாதிகள் நிராகரிக்கின்றனர் மாக்ஸியவாதிகளைப் பெண்ணுரிமைப் போராட்டத்தினின்று ஒதுக்கவும் அப் போராட்டத்திற்குப் பகைமையான அல்லது ஆதரவு தரத் தயங்குஞ் சக்திகளாகக் காட்டவும் முனையும் விஷமத்தனம் இன்னமும் தொடர்கிறது. இதன் பின்னணியிலேயே அண்மையில் என் கைக்கெட்டிய மூன்று பெண்ணிய நூல்களை விமர்சிக்க முற்படுகிறேன்.

## 1. பெண் விடுதலைவாதத்தின் பிரச்சனை மையம்: அது ஒரு மேலைத்தேயக் கோட்பாடா?

செல்வி.திருச்சந்திரன், பெண் கல்விநிலைய வெளியீடு இல. 30, 37 கின்றொஸ் அவென்யு, கொழும்பு-4, இலங்கை, 1990, iv + 15 ப.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்விடுதலைக் கோட்பாடு பற்றிய ஒரு நல்ல அறிமுகமான இந்தச் சிறுபிரசுரம் வெவ்வேறு வகையான பெண்ணிலைவாத நிலைப்பாடுகளை அடையாளங் காட்டுகிறது. மாக்ஸிய பெண்ணிலைவாதத்தினின்று வேறுபட்டதாக ஒரு சோஷலிஸ பெண்விடுதலைவாதத்தை அடையாளங் கண்டு சில "மாக்ஸியவாதிகள்" பெண்விடுதலை என்ற கோஷம் தொழிலாளரைப் பிரித்து விடும் என்று கூறுவதை ஆதாரமாக வைத்து, மாக்ஸிய பெண்ணிலைவாதம் பெண்விடுதலையைத் தள்ளிப்போட முனைவதாக "சோஷலிஸ பெண் விடுதலைவாதிகள்" வாதிப்பதை விமர்சனமின்றி முன்வைத்திருப்பது வருந்தத்தக்கது. சுரண்டற் சமுதாய அமைப்புத் தகர்க்கப்படாமல் எந்த விடுதலையும் சாத்தியமில்லை என்பதாற், பல்வேறு விடுதலைப் போராட்டங்களை மாக்ஸியவாதிகள் மறுக்க வேண்டிய நிர்ப்பந்தமென்ன? அவ்வாறு மறுத்தோர் யார்? அது சகல "மாக்ஸியவாதிகளதும்" நிலைப்பாடா? இவை தெளிவாக்கப்படவில்லை.

பெண்விடுதலையின் பேரில் நடக்கும் சில விஷயங்களைப் பொதுமைப் படுத்திப் பெண்ணுரிமையை நிராகரிக்க முனையும் போக்கையும் பெண்விடுதலை ஏற்கெனவே உள்ளது என்றவாறு தலையை மணலுட் புதைக்கும் போக்கையும் பற்றியும் தந்துள்ள விளக்கங்கள் பயனுள்ளவையும் மேலும் விரிவு படுத்தப்பட வேண்டியவையுமாம்.

"பெண்விடுதலைவாதம் மேல்நாட்டுச் சரக்கல்ல" என்று கட்டுரை ஆசிரியர் வலியுறுத்துவதன் தேவை எனக்கு விளங்கவில்லை. நவீன விஞ்ஞானம், தொழில், சட்டம், நீதிபரிபாலனம், பாடசாலைக்கல்வி போன்றவையும் மனித விடுதலையின் அடிநாதமான மாக்ஸியமும் மேல்நாட்டுச் சரக்குகள்தாம். அவை அயலினின்று வந்தாலும் நம் நாட்டின் பல்வேறு தேவைகள் காரணமாக நமது சமுதாயத்தால் உள்வாங்கப்பட்டன. நிலமான்யசமுதாயத்தின் பெண்ணடிமைத்தனத்திற்குப் பரிகாரங்கள் அதற்கு வெளியிலிருந்து, பெண்ணுரிமையைச் சாத்தியமாக்கவல்ல ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கினின்று, எழுந்தன. அவற்றின் அயற் தன்மை அவற்றின் தோற்றுவாய் சார்ந்தது. அவற்றின் சாராம்ஸம் சமுதாய நடைமுறை சார்ந்தது. அயல்நாட்டுச் சரக்குகளை நாம் எவ்வாறு நமதாக்கிக்

www.tamilarangam.net

கொள்கிறோம் என்பது முக்கியமேயொழிய அவை அயலினின்று வந்தனவா என்பதல்ல். பெண்விடுதலை வெறுமனே பகட்டுக்காகக் கையாளப்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ள அளவில் அதன் அயற்தன்மை பற்றிக் கூச்சப்பட அவசியமில்லை.

2. <u>பெண்நிலைச் சிந்தனைகள்</u>. சித்திரலேகா மௌனகுரு, பெண்கள் கல்வி ஆய்வு நிலையம், 17 ஏ பாக் அவென்யு, கொழும்பு-5, இலங்கை, 1993, viii + 99 ப.

இந்த நூலில் ஏழு கட்டுரைகளுள்ளன. பெண்கள் மீதான ஒடுக்குதலின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய இக் கட்டுரைத் தொகுதியின் முதலாவது கட்டுரையில் "பெண்கள் விடுதலை இயக்கம் என்பது ...தீவிரமான சமூக மாற்றத்திற்கான போராட்டமாகவும் அமைகிறது. ஆனால் அதேசமயம் சோஷலிச உற்பத்திமுறை நிலவும் சமூகங்களிற் கூடத் தொடர்ந்து எதிர்க்கப்படாவிடின் ஆண்மேலாதிக்க முறை தொடரும் என்பதைச் சமகால அனுபவங்கள் புலப்படுத்துகின்றன." என்கிறார்.

பெண்விடுதலை இயக்கம் எத்தகைய தீவிர சமூக மாற்றத்தை வேண்டுகிறது? அதை அடையக் கூடிய மார்க்கமென்ன? அதற்காகப் போராடக் கூடிய சக்திகள் யார்? இவை பற்றிய அக்கறை தொடர்ந்து வருங் கட்டுரைகளில் இல்லை. "சோஷலிச மாற்றம்" ஏற்பட்ட சமுதாயங்களிற் சோஷலிச மாற்றத்தின் பல்வேறு பணிகளையும் நிறைவேற்றுவது எவ்வளவு சிரமமானது என்பதை ஆசிரியர் அறியக்கூடும். குறிப்பிட்ட சோஷலிச சமுதாயங்களில் ஏற்பட்ட மாற்றங்களை வரலாற்றிலும் ஒப்பீட்டு முறையிலும் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பெண்ணுரிமைப் போராட்டம் மட்டுமன்றிப் பழைய சமுதாயத்தின் சகல குறைபாடுகட்கும் எதிரான போராட்டம் இடையறாது தொடரவேண்டிய தேவையை மாஓ சேதுங் தெளிவாகவே விளக்கியுள்ளார். சோஷலிச அரசு ஏற்பட்டவுடன் எல்லாரும் சோஸலிச மனிதராக உருமாற்றம் பெறமாட்டார். கட்டுரையாசிரியர் கடந்த 40 வருடங்களிற் சோஷலிச நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் சர்வதேசிய நிலவரங்கள் பற்றியுமான கணிப்பேதுமில்லாமலே எழுதியுள்ளமை வியப்பூட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாடு பற்றிய கட்டுரையில் மந்தை வளர்ப்பினால் ஏற்பட்ட உபரி உற்பத்தியின் விளைவாக தனிச்சொத்துடைமையும் ஆணாதிக்கமும் ஏற்பட்டதாகக் கூறும் எங்கல்ஸை மறுத்து, கட்டுரையாசிரியர், உபரியின் தோற்றம் சிறுபயிர்ச் செய்கைக் காலத்திலும் இருந்ததற்கு ஆதாரங் காட்டுகிறார். ஆண்கள் கையில் ஆயுதங்கள் இருந்தமையே ஆணாதிக்கத்தின் காரணமாயிற்று என்ற கருத்தை ஆதரிக்கும் ஆசிரியர், அதற்கு முந்திய, வேட்டையாடுங் காலத்தின் ஆயுதங்கள் ஏன் ஆண்ணாதிக்கத்திற்கு வழிகோலவில்லை என்று விளக்கத் தவறிவிட்டார். எங்கல்ஸின் வாதத்தின் சாரம், தனியார் சொத்துடைமையே மனிதர் மனிதரை ஒடுக்குதலுக்கு அடிப்படையான காரணம் என்பதாகும். எந்த ஒடுக்குதலும் ஈற்றில் ஆயுதஞ்சார்ந்த அடக்குமுறையாகவே அமையும். எங்கெல்ஸின் பலவேறு விளக்கங்களிற் தவறுகள் இருக்கலாம். ஆயினும் இவ்விடத்து அவரது அடிப்படையான வாதம் தவறென்று காட்டவல்ல ஆதாரமேதுந் தரப்படவில்லை.

இக்கட்டுரை நேரடியாகத் தொடத்தவறியபோதும், பாலடிப்படையிலான தொழிற்பாகுபாடு என்ற பிரச்சனை, குடும்பம் என்ற அமைப்பையே கேள்விக்குட்படுத்துகிறது. ஒற்றைக் குடும்பச்சமூக அமைப்பின் கீழ்த் தொழிற்பாகுபாட்டின் முரண்பாடுகளைத் தீர்ப்பது இயலாத காரியம். குடும்பம் என்பது ஆணுடைய உடைமை அல்ல என்ற நிலைப்பாட்டின் அடுத்தபடியாகக் குழந்தைகளும் பெற்றோரின் உடைமைகள் அல்ல என்ற கட்டத்தைத் தவிர்க்க முடியாது. பெற்றோர் பிள்ளைகள் உறவு பற்றிய நிலமான்ய சமுதாயக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த இயலாமலும் குழந்தைகள் மீது முழுச்சமுதாயத்திற்குமுள்ள பொறுப்பை ஏற்க முடியாமலும் முதலாளித்துவ தனியுடைமைச் சமுதாயம் திணறுகிறது. எனவே குடும்பம் என்ற அமைப்பின் அடிப்படையிலான மனித உறவுகள் யாவற்றையுமே கேள்விக்குட்படுத்த வேண்டிய தேவை எழுகிறது. பழைய கூட்டுக்குடும்ப அமைப்பினாற் புதிய உற்பத்திமுறை எழுப்பும் பிரச்சனைகட்கு முகங்கொடுக்க முடியாது. எனவே, முழுச் சமுதாயமுமே ஒரு குடும்பமாக இயங்காதவரை, ஆண்-பெண் வேலைப் பிரிப்பின் பிரச்சனைகள் பெண்களுக்குப் பாதகமான முறையிலேயே அமையமுடியும். ஒற்றைக்குடும்பம் என்ற அமைப்பின் கீழ்ப், பெண்களின் உழைப்புப்பற்றி எழுப்பப்படும் கோரிக்கைகள், அடிப்படையான சமுதாயப்

www.tamilarangam.net

பிரச்சனையைத்தொடாதவரை, மற்றைய சமுதாய சீர்திருத்தங்கள் போன்று, எவ்வளவுதான் அவசியமானவையும் வரவேற்கத்தக்கனவாயும் இருந்தபோதுங், குறைபாடுடையனவாகவே அமையும்.

வீட்டுவேலைகளும் பெண்களும் பற்றிய கட்டுரையிற், தொழில்புரியும் பெண்களது இரட்டைச் சுமை பற்றி, ஆண்-பெண் சமத்துவம் பேசும் பெண்களும் பெண்ணிலைவாதிகளுமன்றி வேறெவரும் அக்கறைப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு விதிவிலக்கின்றி முன்வைக்கப்பட்டிருக்கிறது. அதே கட்டுரையிற், கூலிஉழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு "ஏனைய மத்தியதர வர்க்கத்துப் பெண்களைப் போல வேலைக்காரரை வைத்திருப்பதற்கோ நவீன உபகரணங்களைப் பயன்படுத்தவோ வசதி இல்லை" என்பதால் அவர்களது மேலதிக வேலைச் சுமை பற்றிப் பேசப்படுகிறது. இங்கே கட்டுரை ஆசிரியர் இந்த மத்தியதர வர்க்கப் பெண்களுக்குச் சாத்தியமான ஒரு தீர்வான 'வேலைகாரர்' பற்றியும் விரிவாக எழுதியிருக்கலாம்.

பெண்களுக்கு எதிரான வன்முறை-பலாத்காரம் என்ற கட்டுரையில் 'கற்பழித்தல்' என்ற சொல் தவிர்க்கப்பட்டமை மிகவும் நல்ல விஷயம். கற்புப் பற்றியும் பாலியற் பலாத்காரம் பற்றியும் உள்ள ஆணாதிக்கச் சிந்தனைகள் இன்னமுந் தொடர்கின்றன. இக்கட்டுரையில் எழுப்பப்பட்டுள்ள கருத்துக்கள் பரவலாக்கப்படவேண்டும். அதேவேளை, கட்டுரையாசிரியர், விதவைகளையும் பாலியற் பலாத்காரத்திற்குட்பட்டவர்களையும் திருமணம் செய்யும் ஆண்களைத் 'தியாகிகள்' எனக் கருதுவது பற்றிக் கோபிக்கிறார். 'தியாகம்' என்ற கோட்பாடு ஆணாதிக்கஞ் சார்ந்ததேயாயினும், சமுதாயத்தின் எதிர்ப்பையும் ஏளனத்தையும் மீறியே இந்த ஆண்கள் செயற்படுவது கவனத்துக்குரியது. அந்தளவில் அவர்களது தைரியம் முன்மாதிரியானது என்பதை ஆசிரியர் புறக்கணித்துவிடுகிறார்.

இனத்துவமும் பெண்களுந் தொடர்பான கட்டுரையில், இனத்துவ அடையாளத்தை வற்புறுத்துவதன் மூலம், பெண்களுக்குத், தாம் ஒடுக்கப்பட்ட இனத்தின் பெண்கள் என்ற உணர்வை முதன்மைப் படுத்துதல், தாம் பெண்கள் என்ற உணர்வை இரண்டாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்சமானதாக்குகிறது என்ற ஆட்சேபனை முன்வைக்கப்படுகிறது. சாதி, மொழி, மதம், தேசியஇனம் என்று எந்த அடிப்படையில் ஒடுக்கல் நிகழ்ந்தாலும், அந்த அடிப்படையிலேயே அதற்கெதிரான போராட்டம் நிகழ்கிறது. இங்கு முதலிற் கண்டனத்துக்குரியது இனஒடுக்கலேயொழிய, ஒடுக்கலுக்குட்பட்ட மக்களின் இனத்துவ அடையாளமல்ல. இக்கட்டுரை, தேசிய இனஉணர்வின் பல்வேறு அம்சங்களை அவற்றுக்குரிய வரலாற்றுச் சூழலில் வைத்துப் பார்க்கத் தவறியதாற், தொடரும் இனஒடுக்கலைப் பற்றிய ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவும் தவறிவிடுகிறது.

தொடர்பியல் ஆய்வுகளும் பெண்ணிலைவாதமும் பற்றிய கட்டுரையும் அபிவிருத்தியும் பெண்களும் பற்றிய மிளாய்வும் ஆழமற்ற கட்டுரைகள். மீனாட்சியம்மாள் பற்றிய கட்டுரை ஒரு நல்ல அறிமுகக்குறிப்பு. மீனாட்சியம்மாள் பெண்விடுதலைக்காக ஆற்றிய பங்கு என்ன என்று கட்டுரை மூலம் எதுவும் புலனாகவில்லை. விதவையான அவரது மகள் சாதிக்கு வெளியே மறுமணம் செய்ததை ஆதரித்தமை, பிராமணர்களான மீனாட்சியம்மாள் நடேசய்யர் தம்பதிகளின் சமுதாயப் பார்வையின் ஒரு வெளிப்பாடு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியவாதிகள் தமிழரை இடதுசாரிச் சிந்தனையினின்று தனிமைப்படுத்த மிகவுஞ் சிரமப்பட்டார்கள். சித்திரலேகாவின் எழுத்திலும், மாக்ஸியவாதிகளையும் பாட்டாளிவர்க்கப் பார்வையையும் பெண்ணுரிமைப் போராட்டத்தினின்று தள்ளி வைக்கும் முனைப்பு வெகுவாக உள்ளது. சூரியனைச் சுளகால் மூடஇயலாது. அவரவர் தம் தலைகளை வேண்டுமானால் மூடிக்கொள்ளலாம்.

3. <u>பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்</u>. பிரேமா அருணாசலம், ஸவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் ஸாஹிப் 2வது சந்து, சென்னை 600002, தமிழ்நாடு, இந்தியா, 1983, 267 ப.

நமது மரபு பெண்களை உயர்வாக மதித்துத் தெய்வமெனப் போற்றியதாகக் கூறும் பொய்களை மறுக்கும் முனைப்பில் எழுதப்பட்ட இந்நூல் பெண்கள் பற்றித் தமிழிலிலக்கிய மரபின் நீண்ட கால

www.tamilarangam.net

வரலாற்றுப் பார்வையை விளக்க முற்படுகிறது. தொல்காப்பியர் முதல், ஒப்பிடுகையில் அண்மைக் காலத்தவர்களான, இராமலிங்கர் போன்றோர் வரை பெண்களை எவ்வளவு இழிவாகக் கருதினார்கள் என்பதற்கான சான்றுகள் நிறையவே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பும் அதன் காலத்தின் சமுதாய விழுமியங்களைப் பிரதிபலிப்பதையும் இரண்டாயிரம் வருடத் தமிழ் இலக்கியவரலாற்றிற் பெண்கள் ஆண்கட்குக் கீழ்ப்பட்டவர்களாகவே கருதப்பட்டதையும் வெகு சிரத்தையெடுத்து விளக்கியிருக்கிறார். பாரதியே முதன் முறையாகப் பெண் உரிமைக்காகக் குரல் கொடுத்த கவிஞர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நூலின் பங்களிப்பின் முக்கியத்துவம் இதற்குஞ் சிலபடிகள் மேலே போயிருக்கலாம். ஒவ்வொரு படைப்பின் சமுதாயச் சூழலுக்கும் சமுதாய அமைப்பிற் பெண்கள் நிலைக்குஞ் சார்பாக அப் படைப்பு எந்த நிலையில் உள்ளது என விளக்கியிருக்க முடியும். வள்ளுவர் நிலவுடைமைச் சமுதாய விழுமியங்களை மறுக்கவில்லை என்று சில தீவிர இடதுசாரிகள் அவரை முன்பு விமர்சித்ததை நினைவு கூரும் போது இதன் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தத் தோன்றுகிறது. பிறன் மனை விரும்பாமை பற்றியும் பரத்தையர் உறவு பற்றியும் வள்ளுவரது நிலைப்பாடு, ஆண்கள் பல பெண்களுடன் உறவு பூணுவதை அங்கீகரித்துக் குடும்பப் பெண்களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்திய சூழலில், வரவேற்கத்தக்க ஒன்றாகக் கருதப்படாதா?

கம்பர் சீதையின் உருவத்தை அனுமனுக்கு ராமன் கூறும் விதமாக வர்ணிப்பது இன்று ஆபாசமாகத் தெரியக்கூடும். ஆயினும் அன்றைய சமுதாய விழுமியங்கள் வித்தியாசமாக இருந்திருக்க முடியும். கோவிற் சிலைகளிற் தெய்வங்களீறாக ஆடைக் குறைவாகவே உள்ளமையையும் பாலுறவைக் குறிக்குஞ் சிற்பங்கள் கோவில்களை அலங்கரித்ததையுங் கவனிக்கும் போது, பாலுறவு பற்றிய நமது பார்வை காலத்துடன் மாறி வந்ததை நாம் மறுக்க முடியாது. அந்த வகையிற் கம்பரது வர்ணனை பெண்ணை ஒரு நுகர்பொருளாகக் காட்டும் நோக்கையே கொண்டதென்பது முறையாகாது. ஆயினும் பெண்களின் வர்ணனைக்கும் ஆண்களின் வர்ணனைக்கும் இடையிலான வேறுபாடு அக்காலத்தில் இருபாலாரிடமும் எதிர்பார்க்கப்பட்ட சமுதாயப் பண்புகளைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதிபலித்தது என்பதில் ஐயமில்லை.

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் நான்கு நிலங்களாலுங் குறிக்கப்பட்ட நான்கு வேறு வாழ்க்கை முறைகளைக் கொண்டது. இவற்றுடன் பாலையையுங் கருத்திற் கொள்ளலாம். ஒவ்வொரு நிலத்தினதும் வாழ்க்கை முறைக்கேற்பப் பெண்களது சமுதாய அந்தஸ்து வேறுபட்டதா என்பது பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கலாம். பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழவேண்டியோராகக் கருதப்பட்ட பழைய சமுதாய அமைப்பிலிருந்ததை விட அதிகமான அடக்குமுறைக்கு உள்ளான சூழ்நிலை எவ்வாறு உருவானது என்பதும் இலக்கியச் சான்றுகளுடன் விளக்கப்பட்டிருக்கலாம். இக்குறைபாடுகள் தொடர்பாக மைதிலி சிவராமனது அணிந்துரையிலுங் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெண்ணுரிமை பற்றிய அக்கறையுடையோர் நமது மரபிற் பெண்கள் பற்றிய பார்வையை விளங்கிக் கொள்ள மிகவும் பயனுள்ள தகவல்களைக் கொண்டது இந்த நூல்.

4. என்னுடைய விமர்சனக் கூற்றுக்கள் பெண்ணுரிமை தொடர்பான சில பெண்ணியக் கருத்துக்கள் மீதான என் கருத்துவேறுபாடுகள் என்ற வகையில் மட்டுமன்றிப் பெண்ணுரிமை தொடர்பாக முன்வைக்கப்படும் வாதங்களின் பலவீனங்கள் தொடர்பானதுமாகும். பெண்ணியவாதிகள் சிலரது நோக்கிற் பிற ஒடுக்குமுறைகளையுஞ் சமுதாய முரண்பாடுகளையும் விடப் பெண்ணியமே முக்கியமான ஒன்றாகவும் பிற போராட்டங்களுடனும் சமுதாய முரண்பாடுகளுடனும் பெண்ணுரிமைப் போராட்டத்தைச் சேர்த்துக் கருதுவது அவசியமற்றதாகவுந் தெரியலாம். ஒடுக்குதலுக்கெதிரான போராட்டங்களைப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடனும் அவ் வர்க்கப் பார்வையுடனும் இணைக்கும் முனைப்பு மாக்ஸியவாதிகளுடையது. பெண்ணுரிமைப் போராட்டமும் மாதர் இயக்கங்களும் கட்சிக் கட்டுப்பாட்டில் இயங்கவேண்டுமென்று எவரும் நிர்ப்பந்திப்பதற்கில்லை; அதற்கான தேவையும் இல்லை. ஆயினும் எந்த விடுதலை இயக்கமும் பரந்துபட்ட வெகுஜன நலன் சார்ந்ததாக அமையை வேண்டியமையைப் பற்றியும் அந்த விடுதலை இயக்கத்தின் வர்க்கச் சார்பையும் முனைப்பையும் பற்றியும் எவரும் அசட்டையாக இருக்கமுடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணத்தில் சாதியமைப்பு – ஒரு சமூகவியல் பரிசீலனை

வ. ஐ. ச. ஜெயபாலன்

இக்கட்டுரை 8.8.93 அன்று நெதர்லாந்தில் நடைபெற்ற 16 வது இலக்கியச் சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்டது.

1

சாதியமைப்பு இந்தியாவிலும் இந்திய சமூக கலாச்சார செல்வாக்கிற்குட்பட்ட தென்னாசிய நாடுகளிலும் மட்டுமே காணப்படுகிற பலமான சமூக நிறுவனமாகும். அரேபிய பிடோயின் (Bedouin) நாடோடிகள் மத்தியிலும், புராதன எகிப்திலும், ஜப்பானிலும் காணப்பட்ட ஒரு சில சமூகங்களிடையேயும் சாதியமைப்பின் ஒரு சில கூறுகள் நிலவியமை ஆய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும் அவை சாதி அமைப்பை ஒத்ததாக வளர்ச்சி அடையவில்லை.

ஆசியர்களாக இருந்தபோதும் சீன அறிஞர்களுக்கு சாதி அமைப்பு புதிதான, புரிவதற்குச் சிக்கலான ஒரு நிறுவனமாகவே என்றும் இருந்து வந்திருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீன யாத்திரீகன் குவாங் சாங்கிற்கும் (Hsvan Tsang) சாதி அமைப்பு புதிராகவே இருந்தது. 30-10-1979 ல் யாழ் பல்கலைக் கழக தென்னாசிய இயல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தரங்கில் உரையாற்றிய பீக்கிங் பல்கலைக் கழக விரிவுரையாளர் லியூ சிங் வூ (Liu Xing Wu) தான் பீக்கிங் பல்கலைக் கழகத்தில் தென்னாசியா பற்றிய ஆய்வுகளில் ஈடுபடும் வரை சாதி என்ற சொல்லை கேள்விப்பட்டதே இல்லை என்று குறிப்பிட்டார்.

சாதி பற்றிய சேதியை தென்னாசியாவிற்கு வெளியில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு போத்துக்கீசரே எடுத்துச் சென்றனர். சாதியைக் குறிக்கும் ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கு 'காஸ்ராஸ்' (Castas) என்ற போத்துக்கீச மொழிச் சொல்லே அடியாகும்.

ஐரோப்பிய, தென்னாசியாவிற்கு வெளியிலான சீனா போன்ற ஆசிய நில உடைமை சமூக அமைப்புகளில் நிலவிய சமூக நிறுவனங்களை வர்க்க ரீதியாக ஆராய்ந்து புரிந்து கொள்ளமுடியும். தென்னாசிய நில உடைமை சமூக நிறுவனங்களை வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் ஆராய்ந்து புரிந்து கொள்ளுவது அவசியம்.

## II

சாதி அமைப்பின் கீழ் ஒருவன் பிறக்கும் போதே அவனது சமூக, பொருளாதார, கலாச்சார உறவுகள் நிர்ணயமாகி விடுகின்றன. இங்கு அவனது தெரிவுக்கோ தனிப்பட மேலோங்குவதற்கோ இடமில்லை. சாதி அமைப்பு பரம்பரையானது, மேல் கீழ் என படிமுறை உள்ளது, தொழில் சார்ந்தது, கண்டிப்பான சாதிவாரி அகமண விதி, கீழ் நிலையில் உள்ளவர்கள் தீட்டுப்படுத்துவார்கள் என்ற கருத்து, தீண்டாமை, இந்துசமய அங்கீகாரம், சாதி அடிப்படையிலான சமூக சமயச் சடங்குகள், கலாச்சாரம் என்பவற்றால் கட்டிக் காக்கப் படுவது.

சாதி அமைப்பில் படிமுறை அடிப்படையில் அமைந்த பல்வேறு சாதியினருக்கு இடையிலான அக உறவுகள் முக்கியமானவை. ஆராய்ந்து பார்ப்பின் அத்தகைய உறவுகள் நிலத்துடன் பல்வேறு சாதியினரும் கொண்டிருக்கும் உற்பத்தி உறவுகளைப் பிரதிபலிப்பதைக் காணலாம்.

கலாசார ரீதியாக இந்தியனான தென்னாசிய மனிதனுக்கு

www.tamilarangam.net

தனிமனித ஆளுமைகளாலும் முயற்சிகளாலும் சாதித் தடைகளை மீறி மேலோங்குவது சாத்தியமில்லை.

வர்க்க ரீதியாக பெரும்பான்மையாக இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர்; சாதிவாரியாக பல்வேறு பட்டு சிறுபான்மையினராகக் குறுகிப் போவதும், வர்க்க ரீதியாகச் சிறுபான்மையினராக இருக்கும் மேல் வர்க்கத்தினர்; சாதிவாரியாக பெரும்பான்மையினராக விரிவடைவதும், தென்னாசிய சமூக அமைப்பின் சிக்கலான அம்சங்களாகும்.

இது இலங்கைக்கும் பொருந்தும்.

## III

### சாதி - ஒரு சமூகநிறுவனம்

இலங்கைத் தீவில் முஸ்லிம்களைத் தவிர்த்து பௌத்தர்களாகவோ, இந்துக்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ உள்ள சிங்களவர்களதும், தமிழரதும், மலையகத் தமிழர்களதும் மத்தியில் சாதி அமைப்பு வலுவான ஒரு சமூக நிறுவனமாக நிலவுகிறது.

முஸ்லிம்கள் மத்தியில் கூட வலுவிழந்து கைவிடப்பட்டு வருகிற நிலையில் சாதி அமைப்பின் மிச்ச சொச்சங்கள் இன்னும் நிலவுவதை அடையாளங் காணலாம். உதாரணத்துக்கு புத்தளம்-கற்பிட்டிப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் இன்றும் கூட முக்குவ முஸ்லிம்கள் என்று குறிப்பிடப் படுவதும், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் முக்குவரின் சமூக நிறுவனமான 'வயிற்றுவார்' எனப்படும் தாய்வழிக் குடி அமைப்பு (Matri liniage) காணப்படுவதும், யாழ்ப்பாணம் செம்மாதெருவில் வாழ்ந்த தோல் வேலை செய்யும் முஸ்லிம்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்தும் சில முஸ்லிம் பிரிவினரிடை வலுவிழந்த நிலையில் நிலவும் அகமண வழக்கங்களும் இங்கு குறிப்பிடப்படலாம்.

கோட்பாட்டு ரீதியில் இஸ்லாமிய மதத்தைப் போலவே பௌத்த, கிறிஸ்துவ சமயங்களும் சாதி அமைப்பை அங்கீகரிக்கவில்லை. எனினும் நடைமுறையில் முஸ்லிம்கள் மட்டுமே சாதி அமைப்பை நிராகரித்துள்ளனர். இலங்கையில் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் சாதி அமைப்புடன் சமரசம் செய்து கொண்டு ஒன்றிப் போகிற பண்பையே வளர்த்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

18ம் நூற்றாண்டின் கடைக் கூறுகளிலிருந்து 20ம் நூற்றாண்டின் முற்கூறுகள் வரையிலான சிங்கள பௌத்த சமய பீடங்களின் வரலாறு ஒருவகையில் 'கொவிகம' உயர் சாதியினரின் 'சியாம் நிக்காயாவை' சேர்ந்த பிக்குகளுக்கும், தாழ்த்தப் பட்ட 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதிகளைச் சேர்ந்த பிக்குகளுக்கும் இடையிலான போராட்டங்களின் வரலாறேயாகும். பின்னர் 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதியினர் எல்லாச் சாதியினருக்கும் பொதுவான 'அமரபுர நிக்காயாவை' நிறுவினர்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் எல்லாச் சாதியினரையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமையவில்லை. ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தேவாலயம் என்ற வகையில், நிலவிய சாதி அமைப்பிற்குள் சிக்கல்கள் இல்லாமல் கிறிஸ்தவசமயம் தன்னை நிறுத்திக் கொண்டது. மேல் மட்டத்தில் சமய அமைப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக வெள்ளாளர், கரையார் சாதிகளைச் சேர்ந்த குருத்துவ பிரிவினரிடையே இடம் பெற்ற இழுபறிகள் ஒன்றும் பரம இரகசியங்கள் இல்லை.

இந்துமதத்தை சாதி அமைப்பின் தத்துவ கலாச்சார காவல் அரண் என்றே கூறவேண்டும். இலங்கையில் கோவில் பூசகர்களான ஏழைப் பிராமணர்களே உள்ளனர். பிராமணிய இயக்கம் இலங்கையில் இல்லை.

சாதி அமைப்பு இறுக்கமானதாகவும் கொடூரமானதாகவும் பலப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், பெரும்பான்மையினராகவும், பெரும்பாலான நிலத்திற்கும் ஏனைய வளங்களுக்கும் உடைமையாளர்களாகவும், கல்வியில் மேம்பட்டு சமூக பொருளாதார அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறவர்களுமான வெள்ளாளரது இயக்கமான 'யாழ்ப்பாணியமே' யாழ்ப்பாணத்தின் உள்ளது. இது தமிழகத்து மேல்வர்க்க பிராமணர்களது இயக்கமான பிராமணியத்துக்கு ஒப்பிடக்கூடிய யாழ்ப்பாணத்து உயர்சாதிச் சமூகசத்தியாகும். தமிழகத்துப் பிராமணர் தொகைரீதியாக மிகமிக சிறுபான்மையினர். சமூக பொருளாதார ரீதியாகவன்றி மாநில அரசியல் ரீதியாக பலம்பெறமுடிய இயலாதவர்கள். ஆனால் யாழ்ப்பாணத்து மேல்த்தட்டு சூத்திரரான வெள்ளாளரது நிலமை மாறுபட்டது. அவர்கள் சமூக பொருளாதார ரீதியாக மட்டுமன்றி தொகைரீதியாக பெரும்பான்மைச் சமூகத்தவர்களாகவும் அரசியல் ஆதிக்கம் உள்ளவாகளாகவும் இருப்பது கருத்தில்

www.tamilarangam.net

கொள்ளப்படவேண்டும்.

ஒருவகையில் தமிழக அரசியல்கூட பிராமணரது அரசியல் ஆதிக்கத்தையும் அதனூடாக அவர்களது சமூக பொருளாதார கலாசார ஆதிக்கத்தையும் உடைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான மேல்த்தட்டு சூத்திரரது கிளாச்சிதான். திராவிட இயக்கத்தின் முற்போக்கான அம்சம் அவர்கள் பஞ்சமர்களோடு (தாலித்), பஞ்சமர்களது அபிலாசைகளோடு எவ்வளவு சம்பந்தப்பட்டிருந்தார்கள் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

## IV

இலங்கைத் தீவின் நிலவுடைமை அமைப்பையும் சாதி அமைப்பையும் சிங்கள அமைப்பு, தமிழ் அமைப்பு என இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

சிங்கள அமைப்பு கோட்பாட்டு ரீதியாக தனியார் உடைமையல்ல. கோட்பாட்டு ரீதியாக சிங்கள அமைப்பில் நிலம் அரசனுக்கு சொந்தமானது. சாதிவாரிச் சேவைகளுக்காக (ராஜகாரியம்) எல்லாச் சாதியினரும் நிலத்தை மானியமாகப் பெறுவார்கள். 'ரொடி' போன்ற சின்னஞ் சிறு சாதிகள் புறநடையாக இருப்பினும் சாதிவாரிப் பணிகளுக்காக எல்லாச் சாதியினருக்கும் மானியமாக- அளவு, தரம் ரீதியான பேதங்கள் இருப்பினும் நிலம் கிட்டும்.

கோட்பாட்டு ரீதியாக ஆண் வாரிசு இன்றி இறத்தல், சாதிவாரிப் பணிகளை ஆற்றத் தவறுதல் என்பவற்றுக்காக அரசன் நிலத்தை மீளப்பெற முடியும். ஆனால் மேற்படி நிலம் எந்தச் சாதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமாக இருந்ததோ அதே சாதியைச் சேர்நத ஒருவருக்கே திரும்பவும் வழங்கப்படவேண்டும்.

அளவு, தரம் தொடர்பான மாறுபாடுகள் இருப்பினும் உற்பத்திக் காரணியான நிலம் எல்லாச் சாதியினருக்கும் பகிரப்பட்டிருந்த நிலைமையினாலும், கிராமங்க்ள் தனிச்சாதி அடிப்படையில் அமைந்திருந்த நிலைமையினாலும், சிங்களப் பகுதிகளில் வர்க்க ஒடுக்குதல்கள் சாதிவாரித் தன்மை பெறுகிற வாய்ப்பும், சாதி ஒரு கொடுமையான ஒடுக்கும் அமைப்பாகத் தோற்றம் பெறுகிற வாய்ப்பும்- ஒருசில பிரதேசப் புறநடைகளுடன்- குறைவாகவே இருந்தது. இத்தகைய சமூக பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னணியினால் சிங்கள பகுதிகளில் அரசியல் ரீதியாக சாதிவாரியாக அணிதிரளும் வாய்ப்புகளும், வளங்களுக்கும் வாய்ப்புகளுக்குமாக சாதிவாரியாக போட்டியிடும் வாய்ப்புகளும் பலமாக இருந்தன.

தமிழரது நிலவுடைமை அமைப்பு தனியார் நிலவுடைமை அமைப்பாகும். கண்டிய சிங்கள அரசின் கீழ், தமிழ் முஸ்லிம் வன்னிமைத் தலைவர்களால் பரிபாலிக்கப்பட்ட கிழக்கு மாகாண தமிழ்ப் பகுதிகளில் கூட சிங்கள நிலவுடைமை அமைப்பு நிலவவில்லை. தமிழரது நிலவுடைமை அமைப்பான தனியார் உடைமை அமைப்பே அங்கும் நிலவியது.

சிங்களச் சாதி அமைப்பில் கண்டியச் சிங்களப் பகுதிகளிலும், கரையோரச் சிங்களப் பகுதிகளிலும், வெள்ளாளரின் சிங்களப் பிரதியான 'கொவிகம' சாதியினரின் தொகை ரீதியானதும் கலாச்சார ரீதியானதுமான முதன்மையே இருந்தது. தமிழ் சாதி அமைப்பில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே வன்னிமாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திலும் வெள்ளாளர் முதன்மை இருக்கவில்லை.

தமிழரது சாதி அமைப்பை யாழ் குடாநாட்டின் சாதி அமைப்பு, ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் சாதி அமைப்பு என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

திருமலை நகரம் புறநீங்கலாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே குறிப்பிடத்தக்க வகையில் சாதிவாரி அடிமை முறை தமிழ்ப் பகுதிகளிலோ சிங்களப் பகுதிகளிலோ இருக்கவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் திருமலைக்கு வெளியே இலங்கை அடங்கிலும் மிகச் சில வீட்டுப் பணியாட்களே அடிமைகளாக இருந்துள்ளனர்.

1824ம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் 12.5 வீதத்தினரும் திருமலை மாவட்டத்தில் 6.9 வீதத்தினரும் அடிமைகளாக இருந்தனர். ஏனைய பகுதிகளில் கொழும்பில்தான் அதிக அடிமைகள் இருந்தனர். இவர்கள் வீட்டுப் பணியாளர்கள். இருப்பினும் கொழும்பில் அடிமைகளின் வீதம் 0.3 மட்டுமே.

திருமலையில் இருந்த அடிமைகள் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கே உரிய, வெள்ளாளரின் சாதிவாரி அடிமைகளான கோவியர்களாக இருந்தமை, திருமலை மாவட்டத்திற்கு புலம் பெயர்ந்த வெள்ளாளரால் அடிமைகள் அங்கு

www.tamilarangam.net

அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற கருத்துக்கு இடம் தருகிறது. இவர்கள் துறைமுகம் சார்ந்த பணிகளில் ஈடுபடுத்தப் பட்டிருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில், வரலாற்று ரீதியாக ஓரளவுக்கேனும் யாழ்ப்பாணத்தின் செல்வாக்குள்ள பகுதியாக, திருமலை நகர்ப்பகுதி இருந்து வந்துள்ளது. எனினும் திருமலையில் யாழ்ப்பாணத்தைப் போல சாதி ஒடுக்குதல் வளராமைக்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும்.

திருமலையில் அடிமைகளாக இருந்த கோவியர்கள் கலாச்சார ரீதியாக வெள்ளாளருக்குச் சமமானவர்களாகவும், வெள்ளாளரது உள்வீட்டுப் பணியாளர்களாகவும், சட்டரீதியாக அடிமைகளாக இருந்தபோதும் நடைமுறையில் பெரும்பாலும் வெள்ளாளரது வாரக் குடிகளாகவும், அடிமை ஆளணி முகாமையாளர்களாகவும் இருந்தவர்கள். 1844ல் சட்டரீதியாக அடிமை முறை ஒழிக்கப்பட்டபோது நிலப் பஞ்சமற்ற திருமலையில் கலாச்சார ரீதியாக வெள்ளாளருக்குச் சமதையாக இருந்த கோவியர்கள் பொருளாதார ரீதியாகவும் விடுதலை பெறுவதில் அதிகம் சிரமம் இருந்திருக்காது என்று கருதலாம். யாழ்ப்பாணத்து நிலைமை மாறுபட்டது.

கடற்புறத்து மீனவக் கிராமங்கள் புறநீங்கலாக பெரும்பாலான யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பல்சாதிக் கிராமங்கள் ஆகும். இங்கெல்லாம் நிலத்தினதும் உற்பத்திக் காரணிகளதும் பெரும்பகுதி வெள்ளாளரது உடைமையாகும். ஏனைய அடிமை குடிமைச் சாதியினர் ஏதோ ஒருவகையில் வெள்ளாளரைச் சார்ந்து வாழவேண்டிய நிலை இங்கெல்லாம் இருந்தது. இது யாழ்ப்பாண மாவட்டத்தில், பருமட்டத்தில் மட்டுமன்றி கிராமியக் குறுமட்டத்திலும் வெள்ளாளரது ஆதிக்கத்தைப் பலப்படுத்தி நிறுவனமயப்படுத்தியது.

சிறு நீர்ப்பாசனக் குளங்கள் சார்ந்த வன்னிக் கிராமங்கள் பெரும்பாலும் தனிச் சாதிக்கிராமங்களாக அமைந்தன.

திருமலை மாவட்டத்தின் பெரும் பகுதியிலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் பிரதேசரீதியான தனிச்சாதிப் பரம்பல் அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தின் வடபுலம் பெரும்பாலும் விவசாயிகளாக மாறிவிட்ட கரையாரின் கையிலும் தென்புலம் முக்குவரின் கையிலும் இருந்தது. இப் பகுதிகளில் நிலப் பஞ்சம் இருக்கவில்லை.

நிலவுடைமையும் நிலமின்மையும் ஒரே சாதியினுள் அமைகிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிராமங்களிலும் பிரதேசங்களிலும் சாதிவாரியான ஒடுக்குதலுக்கான வாய்ப்புக்கள் அதிகமில்லை. இத் தனிச் சாதிப் பிரதேசங்களில் மிகச் சிறுபான்மையினராக வாழும் அம்பட்டர், வண்ணார் போன்ற தாழ்த்தப்பட்ட சேவைச் சாதிகளின் அனுபவங்கள் புறநடையாக அமையலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆங்கிலேய அரசாங்க அதிபர்களால் 1850களில் 'போடி' நிலவுடைமையாளர்களின் ஆதிக்கம் தகர்க்கப்பட்டு, போடியாரின் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்த வாரக்குடிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு வாவியின் மேற்குக் கரையில் விவசாயத்துக்கும் குடியிருப்புக்கும் நிலம் வழங்கப்பட்டது. இது விடுவிக்கப்பட்ட வாரக்குடிகளின் சமூக பொருளாதார கலாசார சுதந்திரத்துக்கும் வழிவகுத்தது. இவை பற்றி வேறு ஒரு கட்டுரையில் ஆராயலாம்.

யாழ்ப்பாணச் சாதி அமைப்பின் முக்கியமான ஒரு அம்சம் சமூகரீதியாக ஒடுக்கப்பட்ட சாதியினரின் பெரும் பகுதியினர் ஒடுக்கப்பட்ட சாதியினராக மட்டும் இல்லாமல் வெள்ளாளரினதும் அடிமைகளாக இருந்ததுதான். இது பற்றி பிறிதொரு கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளேன்.

V

தேசவழமைச் சட்டப்படி நளவரும் பள்ளரும் சாதிவாரி அடிமைகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களை விற்கலாம், வாங்கலாம், சீதனமாகக் கொடுக்கலாம், நகைநட்டுப் போல அடைமானமாகவும் வைக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் குடிமைச் சாதிகள் பல்வேறுபட்டவர்கள். மிக மிகச் சிறுபான்மையானவர்கள். இவர்கள் கிராமத்து வெள்ளாளர் முழுமைக்கும் சேவை வழங்கவேண்டியவர்கள். இவர்கள் குறித்த ஒரு வெள்ளாளரின் நிலத்துடனோ பணிகளுடனோ பிணைக்கப்பட்டவர்களல்ல. தத்தமது சொந்த நிலத்தில் வாழ்ந்த இவர்கள் கோட்பாட்டுரீதியாகச் சுதந்திரமானவர்கள்.

கீழ்க்காணும் படிமுறை வரிசையில் முறையே சாதிவாரிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிமைகளான வண்ணாரும் அம்பட்டரும் பறையரும் இவர்களுடன் சாதிவாரி அடிமைகளுள் சூத்திரரான கோவியர் புறநீங்கலாக நளவரும் பள்ளரும் நாற்பாலுக்கு வெளியில் கீழ்ப்படுத்தப்பட்டு பஞ்சமர் அமைப்பினுள் இடம் பெறுகின்றனர்.

தமிழகச் சாதி அமைப்பில் பறையர்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்ட பண்ணையாட்களாக இருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் பறையர்கள் அடிமைப் பிரிவினர் அல்ல. பறையருள் வெள்ளாளரின் குடிமைகளாக இருந்தவர்கள் கோலியப் பறையர் என அழைக்கப்பட்டனர். இதைவிட போத்துக்கீசராலும் டச்சுக்காரராலும் சாயவேர்(அவுரிவேர்) சேகரிப்பதற்கும் நெசவு, துணி சாயம் போடுதல், போன்ற வேலைகளுக்குமாக தமிழகத்தில் பண்ணையாட்களாக இருந்த பறையரையும் பள்ளரையும் கொண்டு வந்தார்கள். இவ்வாறு அன்னிய அரசுகளால் கொண்டுவரப்பட்ட பறையர்களும் பள்ளர்களும் ஏற்கனவே நிலவிய யாழ்ப்பாண சாதிய முறைமையின் கீழ் முறையே குடிமைகளாகவும் அடிமைகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டனர். எனினும் இவர்கள் சுதந்திரமானவர்கள். அன்னிய ஆளுனர்களின் பணியாளர்களாக இருந்த இவர்களுக்கு குடியிருப்பு நிலம் சொந்தமாக இருந்தது. இவர்களது சாதிப் பெயருக்கு முன்னால் அடைமொழியாக இவர்கள் ஈடுபடுத்தப்பட்ட மரபு சாராத பணிகளின் பெயர்கள் அமைந்தன. உதாரணமாக வேர்க்குத்திப் பறையர், சாயக்காரப் பறையர், வேர்க்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிப் பள்ளர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

நளவர்களுள் ஒரு பகுதியினர் டச்சுக் கம்பனியாரின் அடிமைகளாக இருந்தனர். இவர்களும் சுதந்திரமானவர்கள். இவர்களுக்கு உதாரணமாக கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

அடிமைச் சாதியினருள் பள்ளரைத் தவிர கோவியரும் நளவரும் தமிழகத்தில் இல்லை. நளவர் பஞ்சங்களின் போது வெள்ளாளரால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்ட மலையாளத்து ஈழவர் என்ற கருத்து பொதுவாக உள்ளது. கோவியரின் தோற்றப்பாட்டின் பின்னணிகளை எனது ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

கோவியர்கள் கலாச்சார ரீதியாக வெள்ளாளருக்குச் சமதையான தென்னிந்திய வடுகர் சாதிப் பிரிவினர். தென்னகப் பஞ்சங்களின் போது வெள்ளாளர்களால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்டவர்கள். ஏனைய சாதியினரைப் போல வெள்ளாளரும் கூட அரசுக்கு, சிங்களத்தில் ராஜகாரியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவும், தமிழில் ஊழியம் எனவும் ஐரோப்பிய மொழிகளில் 'கோவி' (Corvee) எனவும் அழைக்கப்பட்ட கட்டாய சேவையை வழங்கவேண்டியிருந்தது. இது தொடர்பாக வெள்ளாளருக்கிருந்த சலுகைகள் யாவும் போத்துக்கீசர் காலத்திலேயே ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. வெள்ளாளர்களுள் மேம்பட்ட பிரிவினரான அடிமைச் சொந்தக்காரர்கள் தமக்குப் பதிலாக ஊழியம் செய்வதற்காக வடுக சாதி அடிமைகளை அனுப்பினர். வடுகர்கள்'கோவி' என போத்துக்கீச டச்சு ஆவணங்களில் எழுதப்பட்டனர். இதனால் வடுகர் 'கோவி' என உத்தியோக பூர்வமாகப் பெயர்பெற்றனர். இதுவே பின்னர் அவர்களது சாதிப் பெயராயிற்று. இது தனியான ஒரு கட்டுரையில் விரிவாக ஆராயப்படவேண்டிய ஒரு விடயம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெள்ளாளனே கரையோர மீனவர் கிராமத்து நிலங்களும் மீன்பிடிச் சாதனங்களும் புறநீங்கலாக நிலம் ஏனைய உற்பத்திக் காரணிகள் என்பவற்றின் ஏக உடைமையாளனாக இருந்தான். மீனவர் கிராமங்களில் நிலமும் கருவிகளும் கரையார், திமிலர், முக்குவர், பள்ளிவிரியர் போன்ற பல்வேறு மீனவச் சாதியினரின் உடைமையாக இருந்தது. யாழ்மாவட்டத்தில் மீனவர்களுள் கரையாரே பெரும்பான்மையினர். இவர்களுள் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்கள் சமயவாரி அகமண வழக்கம் காரணமாக நடைமுறையில் ஒரு தனிச் சாதிப்பிரிவினராக வளர்ச்சி பெற்றுவிட்டனர். இது ஏற்கனவே சிறுபான்மையாக இருந்த மீனவர்களை மேலும் பிளவு படுத்தியது.

யாழ்ப்பாணச் சாதியமைப்பில் வெள்ளாளரைத் தவிர்த்து மீனவர்களுக்கே சொத்துடமையும் சமூக ஆதிக்கமும் இருந்தது. அவர்களும் கடற்புறத்துக் கிராமங்களில் நிலத்துக்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தனர். எனினும் கலாச்சார ரீதியாக அவர்கள் வெள்ளாளரை விடப் பிற்படுத்தப் பட்டிருந்தனர்.

அவர்களது உற்பத்தியான மீன் விரைவிற் சேதப்படக் கூடியதும் உப உணவுத் தன்மை வாய்ந்ததுமாகும். மீனை அவர்கள் வெள்ளாளருக்கு விற்று பிரதான உணவுப் பொருளான தானியத்தை வெள்ளாளரிடமிருந்து பெறவேண்டியிருந்தது. இத்தகைய பரிமாற்றத் தொடர்புகளாலும் தொகை ரீதியான சிறுபான்மைத் தன்மையாலும் கூட ஒருவகையில் அவர்கள் வெள்ளாளர்களில் சார்ந்திருக்க நேர்ந்தது. வெள்ளாள தலைவர்களுக்கும் கரையார் தலைவர்களுக்குமிடையிலான பிழவுகளும் மோதல்களும் யாழ்ப்பாண வரலாற்றின் முக்கியமான அம்சமாகும். இதற்கு நல்ல

www.tamilarangam.net

இலக்கிய சான்றாதாரமாக நாடகநூலான பூதத்தம்பி விலாசத்தைக் குறிப்பிடலாம்.

## VI

1844ல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண மாவட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு 'அடிமை விடுதலைச் சட்டத்தை' இயற்றினர். இதற்கு முன்னர் படிப்படியாக அடிமை விடுதலையை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷார் கொண்டுவந்த எல்லாச் சட்ட ஏற்பாடுகளும் வெள்ளாளர்களால் முறியடிக்கப்பட்டது. 1844ம் ஆண்டுச் சட்டம் சட்டரீதியான அடிமை விடுதலைக்கு வழிவகுத்த போதும் மேற்படி சட்டத்தின் கீழ் அடிமைச் சாதியினருக்கு குடியிருப்பு நிலம் தானும் ஏற்பாடு செய்யப்படவில்லை. குடியிருப்பு நிலமின்மை, மரபு சாராத மாற்றுத் தொழில் வாய்ப்பு இன்மை என்பவை அவர்களை தொடர்ந்தும் வெள்ளாளரது நிலங்களில் பிணைத்து வைத்திருந்தது. இந்நிலை ஒரு நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் பெரியமாற்றம் எதுவுமின்றித் தொடர்ந்தது. 1850களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாரக்குடிகள் விடுவிக்கப்பட்டபோது அவர்களுக்கு குடியிருக்கவும் பயிர்செய்யவும் நிலம் ஏற்பாடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

1930களின் பின் தாராளவாத, முற்போக்குச் சிந்தனையுள்ள நடுத்தரவர்க்க வெள்ளாள இளைஞர்கள் முதன்மைபெற்ற யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தினர் மத்தியிலிருந்து நாட்டு விடுதலைக்கு மட்டுமன்றி சாதிய விடுதலை தொடர்பாகவும் சமூகப் பிரக்ஞை உள்ள குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. பஞ்சமர்களுள் வேர்க்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிப் பள்ளர், கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர், வேர்க்குத்திப் பறையர் போன்ற சுதந்திரமான சாதிப் பிரிவினர்களும்; நகர வளர்ச்சியினால் உருவான மூட்டை சுமத்தல், றிக்ஷோ இழுத்தல், சந்தைசார்ந்த பணிகள் போன்ற பல்வேறு கீழ் மட்டப் பணிகளிலும் ஈடுபட்டு 'கன்பொலை' போன்ற நகர்களை அண்டிய அடிமைச்சாதியினரின் வட்டாரங்களைச் சேர்ந்த இளைஞர்களும், நளவர், பள்ளர் சாதிப் பிரிவினருள் மரவரி முறையில் கள் இறக்குவதன் மூலம் விடுதலை பெற்றவர்களும் நகர்ப்புறத்தில் தோன்றிய சிகையலங்காரம், சலவைக்கடைகளைச் சார்ந்திருந்த அம்பட்டர், வண்ணார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்ற குடிமை சாதியினரும் மெல்ல மெல்ல எழுச்சி பெற்றனர். இவர்களுள் கல்வி, பொருளாதாரம் என்பவற்றால் சமூக மேம்பாடடைந்தவர்கள் மத்தியிலிருந்து யோவேல் போல் போன்ற ஆற்றலும் துணிச்சலும் மிக்க தலைவர்கள் உருவாக ஆரம்பித்தனர். இப்படி யாழ்ப்பாண சமூக வரலாற்றின் புதிய சகாப்தம் ஒன்று மெல்ல மெல்ல தோற்றம் பெற ஆரம்பித்தது.

குடியிருப்பு, தொழில் என்பவை தொடர்பாக தொடர்ந்தும் வெள்ளாளரது நிலத்துடன் மீளா அடிமைகளாகப் பிணைக்கப்பட்டிருந்த அடிமை குடிமை பிரிவினரால் வெள்ளாளரின் ஆதிக்கத்தை மீறி சுதந்திரமாக நிமிர முடியவில்லை. இவர்களுள் ஒரு சாரார் வெள்ளாளத் தேசியவாதிகளுள் சீர்திருத்தவாதிகளாக இருந்த ஓரிரு தமிழ்த் தலைவர்களின் பின் அணிதிரண்டனர்.

சாதிய எதிர்ப்பு கிளர்ச்சிகளை இடதுசாரிகளின் உதவியுடன் அமைப்பு ரீதியாக நெறிப்படுத்தும் முயற்சிகள் 1940களில் ஆரம்பத்திலிருந்து முதன்மை பெற்று 1943ல் 'சிறுபான்மைத் தமிழர் மகாசபை'யாக தோற்றம் பெற்றது. 50களின் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர்கள் மகாசபை முன்னெடுத்த போராட்டங்கள் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்ததுடன் சமூகப் பிரக்ஞையற்றிருந்த தமிழர் தேசிய இயக்கங்களையும் பாதித்தது. இக் கால கட்டத்தில் முன்னணியிலிருந்த தமிழ்த் தேசியவாதிகளுள் கோப்பாய் கு.வன்னயசிங்கமும் திருமலை இராஜவரோதயமும் அவர்களை ஆதரித்த தமிழ் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்களின் முன்னணிப் பிரிவினரும் தவிர்ந்த ஏனைய பகுதியினர் அசல் யாழ்ப்பாணிகளாக, வெள்ளாளரது நிலைப்பாட்டிலிருந்தே சாதிய பிரச்சினையை அணுகினார்கள்.

1964ல் கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்பு சீனச்சார்பு என உடைந்தது. சாதிய எதிர்ப்புப் போராட்ட அமைப்புக்களும் அவற்றின் மூல தந்திர உபாயங்களும் கூட இரு வகைப்பட்டது.

சண்முகதாசன் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வழி நடத்தலுடன் திரு.எஸ்.ரி.என்.நாகரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரின் வெகுஜன அடிப்படையிலான இலங்கை வரலாற்றிலேயே முன்னுதாரணமற்ற துணிச்சல்

www.tamilarangam.net

மிக்க வன்முறைப் போராட்டம்; மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் கிளையின் வழிநடத்தலுடன் திரு.எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தொடர்ந்தியங்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபையினரின் சட்டரீதியான கிளர்ச்சி என்பவற்றின் பின்னணியில் பல நூற்றாண்டுகளாகத் தேங்கி நாற்றமெடுத்துக் கிடந்த யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார வரலாறு உடைப்பெடுத்துப் பெருகி ஓடத் தொடங்கியது. தமிழர்கள் மத்தியில் முற்போக்கான சமூக அரசியல் அணி மட்டுமன்றி கலாச்சார அணியும் உருவாக இச் சமூக விடுதலைப் போராட்டம் வழி வகுத்தது.

வெள்ளாளரின் பெரும்பான்மை அபிப்பிராயங்களை நிராகரித்து மோதல் நிலைகளுக்கு முகங் கொடுக்கத் தயாராகாமல், அடுத்து எந்த ஒரு கவடும் முன்னே எடுத்து வைக்க முடியாதிருந்த தருணத்தில் அதற்குத் தயாராக எழுந்தவர்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரே தான்.

1960களை யாழ்ப்பாணத்து வரலாற்றின் திருப்பு முனையாக மாற்றியமைத்த இந்த மகத்தான போராட்டங்களின் விளைவாக யாழ்ப்பாணத்து சாதி அமைப்பின் கலாச்சார ரீதியான இறுக்கம் வெடித்து உடையத் தொடங்கியது.

உண்மையில் இன்று எஞ்சியிருக்கும் சாதிய ஒடுக்குதல்கள் தொடர்பான பிரச்சினைகளுள் முக்கியமானவை பஞ்சமர் சாதிப்பிரிவினரின் கீழ் வர்க்கத்தவர்களது சமூக பொருளாதாரப் பிரச்சனைகளேயாகும்.

எல்லோருக்கும் குடியிருக்கும் நிலம் சொந்தமாகிற வகையிலும் குத்தகை விவசாயிகளது பாதுகாப்பு உறுதிப் படுத்தப் படுகிற வகையிலும் யாழ்ப்பாண மாவட்டத்திற்குப் பொருத்தமான விசேடமான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் அவசியப்படுகிறது. உயர் கல்வி வாய்ப்புகள், நிலப் பங்கீடு, நிலம் சாராத-மரபு சாராத வேலை வாய்ப்புகள், மத்திய-உள்ளூர் ஆட்சி அமைப்புக்களில் பிரதிநித்துவம், வேலைவாய்ப்புகள் என்பவை தொடர்பாக அவசியப்படுகிற குறைந்த பட்சக் காலகட்டம் வரை ஒடுக்கப்பட்ட சாதியினரின் கீழ்ப் பிரிவினருக்கு, விசேட முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

www.tamilarangam.net

VII

சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் யாழ்ப்பாணம் ஆட்படத் தொடங்கிய காலக் கட்டம் 19ம் நூற்றாண்டுகளில் ஆரம்பிக்கிறது. பயிர்ச்செய்கை வர்த்தகமயமாதல் கல்வி பரவலாதல் வருமான மார்க்கம் தேடிய பொருளாதார புலப் பெயர்வுகள் என்பவை தோற்றம் பெற்ற இந்த நூற்றாண்டு பற்றிய சமூக பொருளாதார ஆய்வுகள் அவசியம்.

பொருள் தேடும் வேட்கையோடும் அதற்கான தகுதியோடும் இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பிரதேசங்களுள் வங்காள மனிதன் புகுந்தது போல, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுள்ளும், மலையகத் தேயிலைத் தோட்டங்களை நோக்கியும், இலங்கையின் வெளியே கிழக்காசிய நாடுகளை நோக்கியும் யாழ்ப்பாணத்து மனிதன் பெருகிப் பெருகிச் செல்லத் தொடங்கிய காலம் இது. தமிழகத்திலும் இக் காலகட்டத்தில் சைவ-தமிழ்க் காவலர்களாக யாழ்ப்பாண மனிதன் அறிமுகமாகியிருந்தான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே வாழும் தமிழர்களால் 'யாழ்ப்பாணி' என வெறுப்போடும், அச்சத்தோடும், பிரமிப்போடும் பார்க்கப்பட்ட இந்த மனிதன் தான் தமிழகத்து மேல்வர்க்க-வைதீகப் பிராமணர்களின் யாழ்ப்பாணத்து சமூகப்பிரதி. 'யாழ்ப்பாணியம்'தான் இலங்கைத் தமிழர்களின் பிராமணியம். யாழ்ப்பாணியத்தைப் புரிந்துகொள்ள ஆறுமுகநாவலரையும் அவரது நேர், எதிர் பங்களிப்புகளையும் தெரிந்து கொள்வது அவசியம்.

இக் காலகட்டத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார வளர்ச்சியும் சமூக மேம்பாடும் யாழ்ப்பாணத்து பல்வேறு உயர் சாதிச் சமூகங்களை உலுப்பியது. வெள்ளாளருடன் கலாசார ரீதியாக சமநிலையிலும் சமூக பொருளாதார ரீதியாக தாழ்ந்த நிலையில் இருந்த மடப்பள்ளிகள், செட்டி, அகம்படியர், தவசிகள், தானத்தார், பரதேசிகள், தனக்காரர், வாணிபர் போன்ற சாதிப்பிரிவினரும் சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையத் தொடங்கினர். இம் மேம்பாடு மேற்படி சாதியினர் வெள்ளாளருடன் ஒருங்கிணைந்து வெள்ளாளர் மயமாவதற்கு வழிவகுத்தது. இந்த ஒருங்கிணைவுகள் மூலம் ஏற்கனவே பெரும்பான்மைச் சமூகமாக இருந்த வெள்ளாளர் சமூகம் மேலும் விரிவடைந்து தொகை ரீதியாக யாழ்ப்பாண

www.tamilarangam.net

குடாநாட்டின் சனத்தொகையின் சரிபாதிக்கும் சற்று அதிகமான நிலையை அடைந்தது.

வெள்ளாரின் தொகை ரீதியான பலம், கல்வி, அதிகாரபலம், தொகைரீதியான பெரும்பான்மைப் பலம் சாதி அடிப்படையிலான சமூக கலாச்சாரப் பலம் ஒரு புறத்திலும் மொத்த குடித்தொகையில் 50 வீதத்துக்கும் குறைவான ஏனைய சாதியினர் 20 க்கும் மேற்பட்ட சிறுசிறு சாதியினராக பிளவு பட்டிருந்தமை மறுபுறமுமாக வெள்ளாளரின் கையை மேலும் பலப்படுத்தியது. வெள்ளாளர் தவிர்ந்த கோவியர் போன்ற, சூத்திரர் பிரிவைச் சேர்ந்த நடுத்தரச் சாதிகளும், பஞ்சமர் பகுப்புள் இடம் பெறாத தச்சர், கொல்லர், தட்டார் போன்ற பல்லேறு குடிமைச் சாதிகளும் பெரும்பாலும் வெள்ளாளருக்கு சார்பு நிலை கொண்ட சாதிகளாகவே இருந்தன. இந்த நிலைமை வெள்ளாளரது சாதிவாரியான காய் நகர்த்தல்களுக்கும் அவர்களது பிரித்து ஆதிக்கம் செலுத்தும் தந்திரோபாயங்களுக்கும் வாய்ப்பான ஒரு சூழலை ஏற்படுத்தியிருந்தது. வெள்ளாளரின் பிற்போக்கான பகுதியினர் இந்த வாய்ப்பை வரலாறு முழுவதிலும் நன்கு பயன்படுத்தினர்.

## VIII

### நாவலர்- வெள்ளாளரின் காவலர்

இலங்கைத் தமிழர்கள் மத்தியில், சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தினதும் தமிழ் வளர்ச்சிப் பணிகளதும் தந்தையான ஆறுமுகநாவலர் ஆளவந்த அன்னியர்களது சமய அடிப்படையிலான கலாச்சார ஆதிக்க விரோதம், சுதேசிய கல்வித்துறை வளர்ச்சி, தமிழ் நூல் வளர்ச்சி என பல்வேறு துறைகளில் தனது முத்திரையைப் பதித்தவர். இது அவரின் முன்னேற்றமான பார்வையுள்ள முற்பக்க முகத்தைப் பற்றியது. அதே சமயம் அவரது சைவதமிழ் சமூகம் வெள்ளாளரும் சமூக பொருளாதார மேம்பாட்டினால் வெள்ளாளருடன் தன்மயமாகி வருகிற சாதிகளும் மட்டும்தான். ஒடுக்கப்பட்ட சாதியனர் எவரும் நாவலரின் கண்களில் நிறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதர்களாகத் தெரியவில்லை. சம காலத்து சமூக பொருளாதார மாற்றங்கள், மீளா அடிமைச் சேற்றில் ஆழ்ந்து அல்லலுறும் ஒடுக்கப்பட்ட சாதிகளை சேர்ந்த மனிதர்களுக்கும் சென்று சேர்வதை தடுத்த பிற்போக்கு இயக்கமான யாழ்ப்பாணியத்தின் முளையாகவும் அதன் தத்துவார்த்தத் தலைவராகவும் நாவலர் அமைந்தார். இது அவரது பின் நோக்கிய பார்வையுள்ள பிற்பக்க முகத்தைப் பற்றியது.

தன்னைப் பாதிக்கும் மேலாதிக்கப் போக்குகளுக்கு எதிராக நிமிர்ந்து போராடும் முன்நோக்கிய பார்வையுள்ள ஒரு முகமும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களை கொடுமையாக ஒடுக்கி அடக்கும் சமூகப் பிரக்ஞையற்ற பின்நோக்கிய பார்வையுள்ள இன்னொரு முகமும் கொண்ட நவீன யாழ்ப்பாணிகளின் முதற்சந்ததி ஆறுமுகநாவலருடன் தான் ஆரம்பிக்கிறது.

சமகாலத்தில் சிங்களபகுதிகளில் தோற்றம் பெற்ற மறுமலர்ச்சி இயக்கம் உயர்சாதி 'ககாவிகம' ஆதிக்கம் பெற்றிருந்த கண்டிய பகுதிகளில் செல்வாக்கு பெறவில்லை. கரவா, சலாகம, துராவா போன்ற கொவிக அல்லாத சாதியினரும் செல்வாக்குப் பெற்றிருந்த கரையோர சிங்களப் பகுதிகளிலேயே இந்த இயக்கம் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணத்து தமிழரது சைவமறுமலர்ச்சி இயக்கத்தைவிட அதிக சமூக பிரக்ஞையை பௌத்தமறுமலர்ச்சி இயக்கம் வெளிப்படுத்தியமையின் சமூகப்பின்னணியைப் புரிந்துகொள்ள இத்தகவல் உதவும்.

பௌத்தமறுமலர்ச்சி இயக்கம் உயர்ந்த சமூகப் பிரக்ஞையை வெளிப்படுத்திய போதிலும் கத்தோலிக்கர்விரோதம், முஸ்லிம்விரோதம், தமிழர்விரோதம், இந்தியவிரோதம் என்ற வகையில் நவீன சிங்களபௌத்த பேரினவாதத்தின் அடிப்படை அம்சங்களையும் பிறப்பித்தது. நவீன சிங்களபௌத்த பேரினவாதி இங்கிருந்துதான் தோற்றம் பெறுகிறான்.

ஆறுமுகநாவலரின் தலைமையிலான சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிப்பிடப்படுகின்ற இயக்கத்தின் செயற்பாடுகளுடன்தான் இன்றைய யாழ்ப்பாணியக் கலாச்சாரம் தோற்றம் பெறுகிறது.

சிறு தெய்வ வழிபாடும் கிராமியச் சடங்குகளும் நிறைந்த, பரந்துபட்ட சாதிவாரியாக பல்வேறுபட்ட மக்களது பங்குபற்றலும் கொண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்து சமய அமைப்பை ஆறுமுகநாவலர் பிராமணர் தலைமையில் ஆகம மயப்படுத்தினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பிராமணர் தலைமைக்கும் ஆகமக் கட்டுக்கோப்புகளுக்கும் வெளியே, சிறுதெய்வ வழிபாட்டு அடிப்படையில் கிராமியக் கலை கலாச்சார மையங்களாக இயங்கிவந்த கோவில் வழிபாட்டு அமைப்பு இந்த இயக்கத்தினால் தகர்த்து எறியப்பட்டது. தமிழகத்திலிருந்து கோவில் பூசகர்களான நிலவுடைமையற்ற கீழ்வர்க்க பிராமணர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கோட்பாட்டு ரீதியாக யாழ்ப்பாணத்து சாதி சமய கலாச்சார அமைப்பின் கொடுமுடியில் பிராமணர்களை இருத்திய வெள்ளாளன் நடைமுறையிற் தனது உடைமையான கோவில்களில் சேவை செய்யும் பணியாளனாகவே அவர்களைக் கீழ்ப்படுத்தி வைத்தான். கோட்பாட்டு ரீதியாக வெள்ளாளரை விட மேம்பட்டவர்களாகவும் நடைமுறையில் வெள்ளாளர்களின் பணியாளர்களாகவும் வாழ்ந்த இந்தப் பிராமணர்களை எந்த வகையிலும் தமிழகப் பிராமணர்களின் மேல் வர்க்கத்துடன் ஒப்பிடமுடியாது.

அதிஷ்டவசமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்துக் கோவில்களை இந்த ஆகம மயப்படுத்தும் முயற்சி பெரிதாக பாதிக்கவில்லை. கோவில் கலாச்சாரமாக பேணப்பட்ட கிராமியக் கலைகள் கிராமிய வாத்தியங்கள்(-உடுக்கு,பறை) கிராமிய இசைகளுக்குப் பதிலாக தமிழகத்து உயர் கலைகளான கர்நாடக சங்கீதம் தவில், நாதஸ்வர வாத்திய இசை, தேவதாசிகளின் பரதநாட்டியம் என்பன யாழ்ப்பாணத்து கோவில்களில் புகுத்தப்பட்டன. இதனால் யாழ்ப்பாணத்தில் நட்டுவர் போன்ற சாதிவாரிக் கலைஞர்களின் தேவையையும் குடிவரவையும் அதிகரித்தது. இது ஒரு புறத்தில் குறிப்பிடத்தக்க கலாச்சாரப் பங்களிப்பேயாகும். ஆனால் பரந்துபட்ட யாழ்ப்பாணத்து மக்களது கிராமியக் கலை கலாச்சாரத்திற்கு பிரதியீடாகவும் மேட்டுக் குடியினரின் கலாச்சாரமாகவும் தமிழகத்து உயர்கலைகள் புகுத்தப்பட்டமையும் மக்கள் கலைகள்; இழிசனர் வழக்காகக் கழித்து ஒதுக்கப்பட்டமையும் பரந்துபட்ட மட்டத்தில் யாழ்ப்பாணத்தை கலாச்சாரப் பாலைவனமாக்கியது. பரந்துபட்ட மக்களின் கலைகலாச்சாரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் ஒப்பிட்டு ஆராய்கிற ஒருவர் இக்கருத்தையும் ஒத்துக் கொள்ளவே செய்வர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## IX

யாழ்ப்பாண சமுக பொருளாதார வரலாற்றின் புறநடையாக, வெள்ளாளர் மயமாகாமலேயே யாழ்ப்பாணிகளாக அங்கீகரிக்கப்பட்டு பலம் பெற்ற சைவக்கரையார்களது எழுச்சியைக் குறிப்பிடலாம்.

வெள்ளாளரால் நிர்ணயிக்கப்பட்ட சமுக பொருளாதார கலாச்சார அமைப்பில் சாதிவாரி மீனவ சமுகங்கள், தொகை ரீதியாகச் சிறுபான்மையாகவும் கலாச்சார ரீதியாக வெள்ளாளருடன் ஒப்பிடும் போது பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்தனர். எனினும் இவர்கள் சொத்துடைமை உள்ளவர்களாகவும் வெள்ளாளரில் தங்கியிருக்காதவர்களாகவும், வெள்ளாளரைப்போலவே தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் மீது சாதிவாரியாக ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் இருந்தனர். கரையாரில் பெரும்பகுதி கத்தோலிக்கராகப் பிரிந்து போனமை, சைவக்கரையாரை சாதிவாரியாக மேலும் சிறுபான்மையினராக்கியது. யாழ்ப்பாணச் சமுகத்தில் நிலவிய முரண்பாடுகள் மோதல்கள் ஒரு புறத்திலும், தொழில் வாரியாக மீன்பிடித்தல் மட்டுமன்றி, ஆரம்பத்திலிருந்தே சட்டரீதியானதும் சட்டமறுப்பானதுமான கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தமை மறுபுறத்திலுமாக அவர்களை இறுக்கமானதும், செயற்றிறன் மிக்கதும் போர்க்குணம் உள்ளதுமான வகையில் நிறுவனமயப்படுத்தியிருந்தது.

முரண்பாடுகளின் மத்தியிலும் யாழ்ப்பாணத்து வெள்ளாளரையும் சைவக் கரையாரையும் இணைக்கும் வலுவான கலாசார அம்சங்களாக சைவமும், தமிழ் இனத்துவ வளர்ச்சியும் அமைந்தன. தொழில் ரீதியாகவும் சைவக்கரையாரின் கடல் வாணிபப் பண்டங்களின் விற்பனையாளர்களாக, நவீன யாழ்ப்பாணச் சமுகத்தின் பலமான அம்சமான வெள்ளாள வர்த்தக முதலாளிகளே அமைந்தனர். இந்த இணைப்புகள் ஓரளவில் சைவக்கரையாருக்கு பல்வேறு துறைக்ளில் வெள்ளாளரது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

www.tamilarangam.net

எனினும் 1950களில், அரசியலில் தமிழருக்கு எதிரான இன வன்முறையும் காவற் படையினரின் அத்துமீறல்களும் ஆரம்பித்த காலங்களிலிருந்தே, சைவக் கரையாருக்கும் வெள்ளாளருக்கும் இடையே உறவு நிலையில் புதிய பரிமாணங்கள் ஏற்பட்டு வளர ஆரம்பித்தன.

வெள்ளார்மத்தியில் சட்டமறுப்பு, போர்க்குணம், இறுக்கமான சமூக பொருளாதார அமைப்பு என்பவற்றைக் கொண்டிருந்த சைவக் கரையாரை, தமது காவலர்களாகவும் அவர்களது பிரதேச மையமான வல்வெட்டித்துறையை தமது காவல் அரணாகவும் பார்க்கிற போக்கு 1958ம் ஆண்டுக் கலவரங்களின்போது தோற்றம் பெற்று, 1970களில் வலிமை பெறத்தொடங்கியது.

இது தான் 1950களிலேயே சைவக்கரையார், வெள்ளாளர் மயப்படாமல் வெள்ளாளர் மையப்பட்ட 'யாழ்ப்பாணி' சமூகத்தின் பலமான ஒரு அங்கமாக மாறிய கதை.

**ஆய்வின் தேவை**

சிங்களத் தமிழ் சாதி அமைப்பு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் ஊக்குவிக்கப்படவேண்டும். கொவிகம,கரவா சாதியினரது உறவுகளும் வெள்ளாளர் கரையார் உறவுகளும், இலங்கையின் தெற்குக் கரையில் வாழும் பௌத்த கரவா சாதியினரதும் வடகரையில் வாழும் சைவக்கரையாரதும் சமூக பொளாதார அரசியல் வரலாறும் ஒப்பீட்டு ஆய்வுக்கு உரியன.

இத்தகைய ஆய்வுகள் நமது சமூக பொருளாதார வரலாற்றினையும் அதன் இயங்கு திசைகளையும் புரிந்து கொள்வதற்கும் உதவும்.



அஆஇ
வங்கிக்கணக்கு 12 75 43 171
Rabobank,
Odijk,
Netherlands
வருடசந்தா:
நெதர்லாந்து fl. 15,-
ஐரோப்பா fl. 20,-
அமெரிக்கா 20$
ஆசியா 20$
அவுஸ்திரேலியா 20$

www.tamilarangam.net

# இனிமேல்....



இரவுகளும் பகல்களும்
துடித்துப் போகும்
இறந்த நினைவுகளை
மறந்து போவோம்
உயிர்ப்பாய்- புதிய உயிர்ப்பாய்
மிளிர்வோம்.
இவர்கள்
பிரேதங்களை ஒழித்துக்கொண்டே
இருக்கட்டும்.
வீரர்கள் இறக்க...
புதிய வீரர்கள் பிறப்பார்கள்.
புதிய கைகள்
மேலே உயரும்
புதிதாய் சுதந்திரத்தை
தூக்கி நிமிர்த்தும்.
விதவைகளுக்கு பொட்டுவைத்து
மகிழ்ச்சியைக் கொண்டாடும்
ஒருகாலத்தில்
நாங்கள் எல்லோரும்
எதிரியின் கொடிகளைக் கிழிப்போம்
எங்களுக்கு வேண்டுவதெல்லாம்
இனிமேல்
மரணம் தவிர்ந்த
சுதந்திரங்கள்....

இளைய அப்துல்லாஹ்